திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள சப்-மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள் எவற்றையேனும் அவற்றில் தாக்கல் செய்யப்படும் குற்றவியல் வழக்குகள் குறைந்த காரணத்தால் எடுத்துவிடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) இ.பி.கோ. வழக்குகள் தாக்கல் செய்வதும் குறைந்துள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) & (உ) ஐ. பி. சி. வழக்குகளின் எண்ணிக்கை குறைவு பற்றி இது வரை கணக்கு எடுக்கப்படவில்லை.

Detenus of West Bengal State.

*199. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total number of detenus of West Bengal State in this State ; and

(b) the jails in which they have been kept ?

[1972 ஆகஸ்ட் 22

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பாதுகாப்புக் கைதிகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பாதுகாப்புக் கைதிகள் எத்தனை பேர் இம்மாநிலத்தில் வைக்கப்பட்டுள்ளனர்?

(இ) அவர்கள் எந்தச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) உள்நாட்டு பாதுகாவல் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் காப்பு சிறையாளர்களாக 691 பேர் மேற்கு வங்காள சிறைகளிலிருந்து கடலூர் மத்திய சிறைச்சாலைக்கு 3—1—72 அன்று மாற்றப்பட்டனர். 20—7—72 நாளின்படி மேற்கு வங்காளத்திற்கு மாற்றப் பட்டோ அல்லது சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டோ வெளியேறிய 128 காப்பு சிறையாளர்களைத் தவிர எஞ்சியுள்ளவர் 563 காப்புச் சிறை யாளர்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்களில் தமிழ் நாட்டில் கைதிகளாக வைத்திருப்பவர் களில் எத்தனை பேர் நக்ஸலைட்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, யார் யார் எந்தெந்தப் பிரிவைச் சேர்ந்த கைதிகள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, It has been mentioned in the newspapers that some Naxalites are unfortunately in the Cuddalore jail. May I know, Sir, when they are released whether they are escorted to the Madras State border and then released or whether they are released in Madras State itself?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அவர்களுடைய நடவடிக்கை பரவாமல் பார்த்துக்கொள்ள அரசாங்கம் தக்க கண்காணிப்புடன் இருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, அவர்களுடைய பராமரிப் புக்கு ஆகும் செலவை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அதை மேற்கு வங்காள அரசு ஏற்றுக்கொள்கிறது.

1972 ஆகஸ்ட் 22]

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலிருந்து கொண்டு வரப்பட்டு தமிழ் நாட்டில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு மிக அதிகமான சௌகரியங்கள் இங்கு கிடைப்பதாகவும், அவர்கள் தங்களுடைய மாநிலத்திற்குப் போக மறுப்பதாகவும் தெரியவருகிறது. அதைப்பற்றி அரசாங்கம் அறியுமா என்று தெரிய வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்தக் கைதிகளுக்காகப் பரிந்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்னும் அதிக வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டார்கள். மேற்கு வங்க அரசு சட்டப்படி என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளையெல்லாம் கொடுக்கின்றோம் என்று உறுதி அளித்தோம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கும் மேற்கு வங்காளக் கைதிகள் பராமரிப்புக்காகச் செலவாகும் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காள அரசு ஏற்றுக்கொள்கிறது என்று சொன்னேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இப்பொழுது இங்கு இருக்கின்ற கைதிகள் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிபுகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

Agricultural Implements

*200 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to introduce contract system for the maintenance and repair of the Agricultural Implements ?

வேளாண்மைக் கருவிகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேளாண்மைக் கருவிகளைப் பராமரித்தல், பழுது பார்த்தல் ஆகிய, பணிகளை முறையாக மேற்கொள்ள ஒப்பந்த முறை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் : இல்லை.

MR. CHAIRMAN : The time is up, Thiru C. V. Rajagopal. Only one hour is allotted for question-hour.

Hanks of Yarn

* 201. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) total number of hanks of yarn produced by Traditional Charka, Ambar Charka and Textool Charka—categorywise particulars under each year from 1962–63 to 1970-71 ;

(*b*) total number of spinners benefited under each category under each of the above years ;

(*c*) per-capita wages paid per day under each category for the above years ;

(*d*) per-capita hanks produced categorywise per year;

(*e*) split wage paid for, per hank categorywise ; and

(*f*) cotton content in weight per hank categorywise on an average ?

நூல் சிட்டங்கள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1962-63 முதல் 1970-71 வரை ஆண்டு வாரியாக முறையே கை ராட்டை, அம்பர் ராட்டை, யந்திர ராட்டை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நூல் சிட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

(இ) மேற்கண்ட ஒவ்வோர் ஆண்டிலும், ஒவ்வொரு வகையின் கீழும் நூல் நூற்போர் மொத்தம் எத்தனை பேர் பயனடைந்தனர் ?

(உ) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் ஒவ்வொரு வகையின் கீழும் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு ?

(எ) ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபர் உற்பத்தி செய்த சிட்டங்களின் எண்ணிக்கையாது ?

(ஐ) சிட்டம் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட ஊதிய வீதம் யாது ?

(ஒ) சராசரியாக ஒரு சிட்டத்தில் அடங்கியுள்ள பஞ்சின் எடை யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

512–513 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 22]

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, மொத்தம் விற்கப்பட்டது ரூ. 3,06,34,287. விற்பனையில் ரிபேட்டாகக் கொடுக்கும் நேரத்தில் விற்பனை செய்யப்பட்டது இரண்டு கோடியே சொச்சம் என்று காணப்படுகிறது. ஆகையினால் ரூபாய்க்கு பத்து பைசா ரிபேட் கொடுத்தாலொழிய விற்பனையும் உற்பத்தியும் அதிகப்படுவதில்லை என்று தெரிய வருகிறது. இதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவு, மற்றத் துணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அதிகமாக இருக்கின்ற காரணத்தால் விற்பனை குறைவாக இருக்கின்றது. ஆகையினால்தான் அரசு உதவி செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, கதர் திட்டத்தின் முக்கிய அடிப்படை நோக்கங்களில் ஒன்று அதிகமான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது. இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரக் கணக்குப்படி 1965-66-ல் மொத்தம் 265 லட்சம் சிட்டங்கள் நூற்கப்பட்டிருக்கின்றன. 1970-71-ல் 271 லட்சம்தான் நூற்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் அதிகமாக முன்னேற்றம் அடையவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பயன் அடைந்தவர்கள், நூற்போருடைய எண்ணிக்கை 1965-66-ல் 1,24,787. அம்பர் சர்க்கா மூலம், கை ராட்டை மூலமும் சேர்ந்து 1970-71-ல் 74,069 பேர் நூற்பவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். கிட்டதட்ட 50,000 பேர் வேலை இழந்திருப்பதாகத் தெரிகிறது. ஏன் என்று விளக்க வேண்டும். கதர் திட்டம் முன்னேற்றம் அடைகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நூற்பவர்களில் பலர் வேலை இழந்து நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு கொடுப்பது மட்டும் இந்தக் கதர் திட்டத்தின் நோக்கம் என்று சொல்லிவிட முடியாது. இயந்திரங்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு, நூற்போருக்கு ஊதியம் அதிகமாகக் கிடைக்கிறது. கை ராட்டைக்கு ஒரு நாள் கூலி 66 காசு. அம்பர் சர்க்காவில் செய்கின்றவர்களுக்கு 1-02 ஒரு நாளைக்குக் கூலி கொடுக்கப்படுகிறது. டெக்ஸ்டூல் சர்க்கா என்று வருகிற போது, நாள் ஒன்றுக்கு ரூ. 2 கிடைக்கிறது. இதற்கு நிதி அளிப்பதற்கு மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அது வருகிறபோது மூன்று ரூபாய் கிடைக்கும். ஒவ்வொரு பிளாக் தோறும் விரிவு படுத்த திட்டம் இருக்கிறது. தாற்காலிகமாக இந்த இயந்திரத்தால் எந்த விதத்திலும் வேலை வாய்ப்பு குறையாது. கொஞ்சம் கொஞ்சமாக இயந்திர சாதனங்கள் வளர, வளர, கூலி உயர்வு அதிகமாகும்.

[1972 ஆகஸ்ட் 22

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, புள்ளி விவரக் கணக்கைப் பார்க்கின்றபோது, 50 ஆயிரம் பேருக்கு மேல் வேலை இழந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ? அவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மாற்று வேலை என்பதல்ல. இந்த அம்பர் ராட்டையும் டெக்ஸ்டூல் ராட்டையும் கொடுப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த டெக்ஸ்டுல் ராட்டைகளைப் புகுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பு குறைந்திருப்பதாக இருந்தாலும், அது தாற்காலிகமானதுதான். அதன் காரணமாக துணி உற்பத்தி அதிகமாகி, விற்பனையும் அதிகமாகி, வேலை வாய்ப்பு பெருகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, 1966-ஆம் ஆண்டுக்கும் 1971-ஆம் ஆண்டுக்கும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 1969-70, 1970-71-ல் பார்த்தால் 3,07,68,721 சிட்டங்கள் உற்பத்தியாகியிருக்கின்றன. உற்பத்தி குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அம்பர் ராட்டையையும், டெக்ஸ்டூல் ராட்டையையும் போதுமான அளவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அதற்குரிய சாதனங்களும் இயந்திரங்களும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. ஒரு சில இடங்களில் சோதனையாக வைத்திருக்கிறோம். எல்லா இடங்களிலும் சீக்கிரத்திலேயே நிறுவப்படும். அப்பொழுது வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், இந்த அம்பர் சர்க்கா, டெக்ஸ்டூல் ராட்டைகளை புகுத்துவதால் 50,000 பேர் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அப்படி வேலை இழந்தவர்களுக்கு ஏதாவது மாற்று வேலை கொடுக்க அரசிடம் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசால் இப்பொழுதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நிதி வசதி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் விரைவில் விரிவுபடுத்தப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் இந்த டெக்ஸ்டூர் ராட்டைகளைப் புகுத்த தொழிற்சாலை ஏற்படுத்த இருக்கிறது. அப்பொழுது அதிகமான பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் : தலைவர் அவர்களே, இதற்கு ஏதாவது காலம் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, காலம் குறிப்பிட்டுச் சொல்வது என்பது முடியாது. அது நம் கையில் இல்லை. கிசான் ராட்டைக்காக மத்திய அரசாங்கம் 20 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அவர்கள் சொல்லித்தான் இந்த டெக்ஸ்டூல் ராட்டைகள், அம்பர் ராட்டைகளை அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் பணம் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் சொல்கின்றபடிதான் ஓரளவுக்கு அனுசரித்துப் போகும் நிலைமையில் நாம் இருக்கிறோம். விரைவில் அதற்கான தொழிற்சாலைகளை அமைத்திட சம்மதித்திருக்கிறார்கள். நமது அரசாங்கம் அதில் தக்க கவனம் செலுத்தி வருகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, கிசான் ராட்டையில் நூல் நூற்பதற்கு 66 காசு, அம்பர் ராட்டை, டெக்ஸ்டூர் ராட்டைகளில் நூற்பதற்கு ரூ. 1, ரூ. 2 என்று போடப்பட்டிருக்கிறது. அதனால் கிசான் ராட்டை வளர்ச்சி பெறுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அதைப்பற்றித் திட்டவட்டமாகக் கொள்கை அறிவித்திருக்கிறார்கள். இயந்திரத் திட்டம் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து வந்தால், மற்றத் துணிகளோடு போட்டி போடும் நிலைமைக்கு இந்தத் திட்டத்தை வளர்க்க முடியும். அத்தருணத்தில் வருமானமும் பெருகுவதற்கான வழி செய்யப்படும்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, கதர் அணிய வேண்டும் என்று சொன்னவர்களே கதர் அணிவதை மிகவும் குறைத்திருக்கிறார்கள். அதனால்தான் என்னவோ குறைந்திருக்கிறது. கதர் கட்டியவர்களும் குறைந்திருக்கிறார்கள். இந்தக் கருத்து உண்மைதானா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, புள்ளி விவரம் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் எல்லா விவரங்களும் தெரியும்.

Tractor Training Centre

*202. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any tractor training centre is to be opened in this State ; and

(*b*) if so, the details thereof?

டிராக்டர் பயிற்சி நிலையம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்த மாநிலத்தில் டிராக்டர் பயிற்சி நிலையம் ஏதும் தொடங்கப் படவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இம்மாநிலத்தில் டிராக்டர் பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்குவது பற்றி மத்திய சர்க்காருடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

Tourist Development Corporation

* 203. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tourist Development Corporation have arranged for any Musical and Classical Dance performances on fixed days in ten months for the benefit of Tourists in Madras; and

(*b*) if so, the details thereof?

சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக 10 மாதங்களில், முடிவு செய்த சில நாட்களில் மட்டும் இசை நிகழ்ச்சி, கிராமிய நடனம் ஆகியவற்றைச் சென்னை மாநகரில் நடத்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

1972 ஆகஸ்ட் 22]

* 204 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Tourism Development Corporation of Tamil Nadu has taken up any survey work of the districts ; and

(b) if so, the details thereof ?

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாவட்டங்களில் சுற்றுலா ஆய்வுப் பணி எதையேனும் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

THE HON. THIRU K. RAJARAM: (a) Yes.

(b) With a view to assessing the Tourist potentialities in the State and to prepare a Master Plan for evolving priorities the Tamil Nadu Tourism Development Corporation Ltd., is currently conducting tourism promotion survey throughout the State.

For this purpose the District Collectors were requested to convene Tourism Promotion Meetings in their districts. The Chairman and the Managing Director of the Corporation and other leading citizens of the district participated in the meetings. The preliminary Master Plan prepared by the District Collectors formed the basis for discussion at the meetings. So far, the Corporation has conducted Tourism Promotion Meetings in ten districts. After completing the survey in all the districts the Corporation will draw up a Master Plan at State level to be implemented subject to availability of funds. The basic policy of this scheme is to develop such areas as are identified as Tourist spots, in the first phase.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஹாங்காங் நகரத்தில் உள்ள 'டிம்லாண்ட்' போன்று சென்னையிலும் ஒரு இடத்தை அமைத்து வெளிநாட்டார் கண்டு மகிழும் ஏற்பாட்டை அமைச்சர் செய்ய இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இது வரை எந்த உத்தேசமும் அரசாங்கத்திடம் இல்லை.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, how many places have been declared as Tourist Centres in Tamil Nadu now ? May I know the names, Sir ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சமீபத்தில் நிறைய இடங்கள் தமிழகத்தில் சுற்றுலா இடங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அது பற்றி, "மாஸ்டர் பிளான்" தயாரித்து வருகிறோம். இருந்தாலும், அதைப்பற்றித் தகவல் தரும் நிலையில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் தருகிறேன்.

Development of the Thalli Region in Dharmapuri district

* 205. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to develop the Thalli Region in Dharmapuri district;

(*b*) whether the Government are aware that this spot is termed as 'Little England'; and

(*c*) if so, the details of proposed development plans?

தருமபுரி மாவட்டம் தளி வட்டாரத்தை மேம்படுத்துதல்

திரு. எஸ். வெள்ளைப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரி மாவட்டம், தளி வட்டாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இப்பகுதி "சிறிய இங்கிலாந்து" என்ற பெயரிடப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(உ) ஆமெனில், மேம்பாட்டுத் திட்டத்தின் விவரங்கள் யாவை ?

A.—THE HON. THIRU K. RAJARAM (*a*) No.

(*b*) Yes.

(*c*) No plan has been drawn up.

THIRU A. R. DAMODARAN : May I know why it is known as 'Little England' ? It is mentioned here whether the Government are aware that this spot is termed as 'Little England" to

which the Hon. Minister answered 'Yes'. May I know why it is termed as 'Little England'?

THE HON. THIRU K. RAJARAM: Mr. Little Wood lived in Dharmapuri in the old Salem district. He visited the spot. After seeing the lakes and beautiful atmosphere, he named it as 'Little England'. The height is also 3,500 feet. It has got very pleasant weather also.

Karunanidhi Nagar, Madras

* 206. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the housing flats of the State Housing Board at Karunanidhi Nagar, Madras have been completed as scheduled; and

(*b*) if so, whether these flats have been handed over to the purchasers as scheduled?

சென்னை, கருணாநிதி நகர்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, கருணாநிதி நகரில் மாநில வீட்டு வசதி வாரியத்தின் வீட்டு அங்கணங்கள் கட்டும் பணி திட்டமிட்டபடி முடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், இந்த அங்கணங்கள் திட்டமிட்டவாறு வாங்கியவர்களுக்கு ஒதுக்கப்பட்டதா?

THE HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) The flats should have been handed over in November, 1971. But there was a time-lag of four months as the electricity connections could not be obtained in time. The flats were, however, handed over in March, 1972.

Free supply of implements to persons belonging to Dhobi and Barber professions

* 207. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state:

(*a*) the number of persons belonging to dhobi and barber professions to whom free supply of implements was made till date; and

(b) the number of non-Hindus who received such free supplies out of them ?

சலவைத் தொழில், முடி திருத்தும் தொழில் செய்பவர்களுக்கு கருவிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சலவைத் தொழில், முடி திருத்தத் தொழில் செய்யும் எத்தனை பேருக்கு தேவையான கருவிகள் இன்றைய நாள் வரையில் இலவசமாக வழங்கப்பட்டன ?

(இ) இவர்களில், இந்துக்கள் அல்லாதோர் எத்தனை பேருக்கு இவ்வாறு கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ)—

வருடம்.		சலவையாளர்.	முடிதிருத்துவோர்.	மொத்தம்.
(1)		(2)	(3)	(4)
1966–67	..	—	—	1,440 தனிப்பட்ட
1967–68	..	—	—	1,425 விவரம் கிடைக்க வில்லை.
1968–69	..	745	753	1,498
1969–70	..	758	784	1,542
1970–71	..	748	765	1,512
1971–72	..	878	879	1,757

(இ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலிலுள்ள சலவையாளர், முடி திருத்துவோரும் இவ்வுதவியைப் பெற தகுதி உடையவர். இந்துக்களிலிருந்து மதமாறியவர்களுக்கோ இந்துக்களல்லாத சலவையாளர், முடித்திருத்துவோர் களுக்கோ இவ்வுதவி தரப்படுவதில்லை. எனவே கேள்வி 'இ'-க்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்துக்கள் அல்லாதவர்களுக்குக் கொடுக்கப் பட்டதா என்பது தான் கேள்வி. அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்துக்கள் அல்லாதவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் இல்லை. முஸ்லிம்களில் தமிழ் பேசுகிறவர்கள் இருந்தாலும், அவர் களில் தனிப்பட்ட முறையில் மருத்துவர்கள், சலவையாளர்கள் என்று இல்லை.

1972 ஆகஸ்ட் 22]

என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஜாதி அடிப்படையில் பாகுபாடு இருப்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவர் அவர்களே, மாவட்ட நல அதிகாரிகள் மூலமாகக் கொடுக்கப்படும். தொழில் கருவிகள், தொழில் செய்யக்கூடிய சலவைத் தொழிலாளிகள், முடிதிருத்துவோருக்குக் கிடைப்பதில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இது வரை வரவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மு. மாசிலாமணி : தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினராக சலவையாளர், முடிதிருத்துவோர் ஆகியோருக்கு அளிக்கக் கூடிய தொழிற் கருவிகளை மற்ற சமூகத்தினர் பெற்றுக்கொள்வதாக புகார் ஏதேனும் அரசுக்குக் கிடைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அந்தந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தான் வழங்கப்படுகிறது. மற்றவர்கள் பெற்றதாகப் புகார் வரவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த உதவி தொழில் அடிப்படையில் செய்யப் படுகிறதா அல்லது ஒரு ஜாதி அடிப்படையில் செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். தொழில் அடிப்படையில் செய்யப்படுமானால், ஜாதி அடிப்படை ஏன் வருகிறது? எந்த ஜாதியாக இருந்தாலும், தொழில் செய்கிற வர்களுக்கு என்று ஏன் கொடுக்கப்படவில்லை என்பது தான் கேள்வி.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தொழில் அடிப் படையில் செய்யப்படுவதில்லை. பிற்படுத்தப்பட்டது என்று என்ன தொழிலில் பிற்படுத்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். ஆகவே, தொழில் சம்பந்தமாகத் தருவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கவனப்படுத்துகிறேன்.

திரு. தி. க. சண்முகம் : தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த அரசினர் இது போன்ற உதவிகளைச் செய்து வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1967-ல் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் தான் இந்தச் சலுகைகள் தரப்படுகின்றன. அதற்கு

முன் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல் இல்லை.

திரு. கே. ராஜாராம் : இதற்கு முன் இருந்த காங்கிரஸ் நிர்வாகத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு, முடி திருத்துவோர், சலவையாளருக்குத் தொழிற் கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவர்கள் கொடுத்தது ஒரு அளவோடு கொடுத்தார்கள். இப்பொழுது இலவசமாக நாங்கள் கொடுக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இலவசமாகக் கொடுக்கப்பட்டது.

திரு. எம். எம். பக்கர் : முஸ்லிம்களில் லப்பைகள் பிற்பட்டவர்கள். அவர்களிலும் சலவைத் தொழிலாளிகளும் முடி திருத்தும் தொழிலாளிகளும் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பெறுவது இல்லையா என்று அறிய விரும்புகிறேன். பெறாவிட்டால் வகை செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது வரை விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வரவில்லை. வந்தால் கவனிப்போம்.

Learner Drivers of the Transport Department

* 208. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether a number of learner drivers of the Transport Department, were arrested in Madras about 13th August 1971; and

(*b*) if so, the reasons therefor ?

போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பயிற்சி வலவர்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாள் அளவில், சென்னையில் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த பயிற்சி வலவர்கள் (Learner Drivers) பலர் கைது செய்யப்பட்டனரா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Traffic Regulation Work by the Students

* 209. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the expansion of the scheme for the use of students for traffic regulation work in Madras City ?

போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரில் வண்டிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பணிக்கு மாணவர்களை முறையாகப் பயன்படுத்தும் திட்டம் எதும் இல்லை.

Subramaniar Temple at Tiruchendur

* 210. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to answer the following question in connection with the answer for the L.C.Q. No. 75 on 31st January 1972—the present stage of the construction of break waters for protecting the Subramaniar Temple at Tiruchendur from sea erosion ?

திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோவில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 31—1—1972-ஆம் நாள் சட்ட மன்ற மேலவையில் வினா எண். 75-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை விரைவாக நடந்து வருகிறது.

Fire Accident in Rameswaram Temple

*211. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether any fire accident took place in Rameswaram Temple;

(b) if so, the reason therefor; and

(c) the steps taken by the Government to prevent such fire accidents?

இராமேசுவரம் கோவிலில் தீ விபத்து

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமேசுவரம் கோவிலில் தீ விபத்து ஏற்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்படி ஏற்பட்டது?

(உ) இத்தகைய தீ விபத்துக்களைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) பொம்மை கடைக்காரர், பொம்மை செய்வதற்காக மெழுகினை உருக்கிடுவதற்கு உபயோகப்படுத்திய விளக்கிலிருந்து தற்செயலாகக் கடை தீப்பிடிக்க, இத் தீ மற்ற கடைகளுக்கும் பரவியது.

(உ) இது சம்பந்தமாக, அரசு ஆணை எண். (நிலை) 2064, வருவாய்த் துறை, நாள் 20—7—1972-ல் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, இம்மாதிரியான தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அந்தக் கடைகளெல்லாம் அந்த ஆலயத்திற்கு வெளியே நிர்மாணிக்கப்போகிறார்களா? அல்லது தொடர்ந்து கோவிலுள்ளேயே வைக்க அனுமதிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இம்மாதிரி தீ விபத்துக்கள், இராமேஸ்வரம் கோவிலில் ஏற்பட்டதைப் போல மற்ற இடங்களில் ஏற்படக்கூடாது என்று, கோவில் உள்ளே இருக்கும் கடைகளை, வெளியே

1972 ஆகஸ்ட் 22]

வைக்க அவர்களுக்குக் கடை கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால், மதுரையில்கூட அந்தத் திட்டம் கைவிடப் பட்டது. இருந்தாலும், இராமேஸ்வரத்தில் அந்தக் கடைகளை அப்புறப் படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணத்தால், கடைகளைக் கோவிலை விட்டு வெளியேற்ற ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, கடைக்காரர்கள் எதிர்ப்பு காரணமாக கோவிலை வியாபாரக்கூடமாக ஆக்கி, இரைச்சல் ஏற்படு வதைத் தவிர்க்க, கோவிலின் உள்ளே உள்ள கடைகள் வைப்பதைத் தடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதே கோவிலில் தான் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்தத் தீ விபத்தில் அந்தப் பிரகாரத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா? அதில் ஒரு பகுதியை வியாபாரிகளிடமிருந்து நன்கொடையாக வாங்க, திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தீ விபத்தில் சுமார் 1½ லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடை வைத்துள்ளவர்கள் சிறிய கடைக்காரர். 100 ரூபாய், 200 ரூபாய் போட்டு வியாபாரம் செய்ப வர்கள். நன்கொடை ஏதும் வசூல் செய்ய முடியாது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பெரிய கோவில் களில் விலையுயர்ந்த பொருள்கள் இருப்பதால், தீ விபத்து ஏற்பட்டு, வைரங்கள் காணமல் போய்விட்டன என்றும், சதி காரணமாகச் செய்கிறார்கள் என்றும் மக்கள் பேசுகிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : எந்தக் கோவிலில் அந்தத் தீ விபத்து ஏற்பட்டு, பரவலாகப் பேசுகிறார்கள் என்பதைத் தயவு செய்து உறுப் பினர் அவர்கள் சொன்னால், நலமாக இருக்கும்.

திரு. எம். ராஜா அய்யர் : இந்தக் கோவிலுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய அரசு பொதுநிதியிலிருந்து ஏதேனும் உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அறங்காவலர் குழுவிலிருந்து இதற்கான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள்

வந்திருக்கிறது. மற்றக் கோவில்களின் உபரி நிதியிலிருந்து, அரசு ஆலயத் திருப்பணிக்கு ஒதுக்கும் நிதியிலிருந்து ஈடு செய்து, விரைவில் வேலை தொடங்கப் பெற்று, முடிக்கப்பெறும்.

Libraries in Temples

* 212. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of temples which have libraries in Tamil Nadu ?

திருக்கோயில்களில் நூலகங்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

தமிழகத்தில் எத்தனை திருக்கோயில்களில் நூலகங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 202 கோயில்கள்.

திரு. தி. க. சண்முகம்: தலைவர் அவர்களே, திருக்கோவில்களில் உள்ள நூலகங்களில் சமய சம்பந்தமான நூல்கள் இருக்கின்றனவா அல்லது மற்றும் தமிழ் இலக்கியம் சம்பந்தமான நூல்களை வைக்க அனுமதி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்து சமயத்தைப் பரப்பும் நூல்களும், தமிழில் இலக்கிய ஆராய்ச்சி நூல்களும், இலக்கியத் துறை சம்பந்தமான நூல்களும் வைத்திருக்கிறார்கள்.

Surplus Funds with the Hindu Religious and Charitable Endowments Department

* 213. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount of surplus funds that is available at present with the Hindu Religious and Charitable Endowments Department.

இந்து அறநிலைய ஆட்சித் துறையில் இருக்கும் உபரி நிதி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து அறநிலைய ஆட்சித் துறையில் தற்போது இருக்கும் உபரி நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்து சமய-அறக்கட்டளைகள் (நிர்வாக) நிதியின் இருப்பு, துறையின் உபரி நிதியாகக் கருதப்படுவதற்கில்லை. இது துறையின் நடப்புக் கணக்காகக் கருதப்பட வேண்டும்.

31—3—1971 அன்றுள்ளபடி நிதி இருப்பு ரூ. 59,68,560 94 ஆகும்.

Thayumanavar Temple, Tiruchirappalli

* 214. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any representation has been made to open a maternity hospital on behalf of Sri Thayumanavar Temple, Tiruchirappalli ; and

(*b*) if, so, the action taken thereon by the Government ?

திருச்சி தாயுமானவர் கோயில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி தாயுமானவர் கோயிலின் சார்பில் மகப்பேறு மருத்துவ மனை திறக்கக் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Idols.

* 215 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a large number of idols was recovered at Chinnathambur near Nagapattinam in Thanjavur district about 6th March 1972; and

(*b*) if so, the details thereof ?

கடவுளர் சிலைகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாளளவில் தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்திற்கருகிலுள்ள சின்ன தும்பூரில் ஏராளமான கடவுளர் சிலைகள் மீட்கப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஒரு சிலை மட்டும்.

(இ) ஸ்ரீநடராஜர் சிலை.

எடை.		உயரம்.	
கி. கி.	கிராம்.	அடி.	அங்.
47	500	2	9½

திரு. ஜி. சுவாமிநாதன் : அதனுடைய விலை அல்லது மதிப்பு எவ்வளவாக இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதனுடைய எடை 47½ கிலோ கிராம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மதிப்பு எவ்வளவு என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

Pending cases in the office of the Assistant Commissioner of the Hindu Religious and Charitable Endowments in Madras.

* 216. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the total number of cases filed during (1) 1968, (2) 1969, (3) 1970, (4) 1971, and (5) 1972 now pending in the office of the Assistant Commissioner of Hindu Religious and Charitable Endowments in Madras ?

சென்னை இந்து சமய-அறக்கட்டளைத் துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ள முடிவுரு வழக்குகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

1968, 1969, 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மொத்தம் எத்தனை வழக்குகள், சென்னை, இந்து சமய-அறக்கட்டளைத் துறை உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தற்போது முடிவுரு நிலையில் உள்ளது ?

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் வேண்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தனி நபர் ஊதிய முரண்பாட்டுக் குழுவின் சிபாரிசு. . .

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்கள் : இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டதா ? முடிந்த கேள்விக்கு சம்பந்தப்பட்டதா ? மத்தியில் ஒன்றும் பேசக்கூடாது. அது வரும்போது பேசலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, விளக்கம் தானே கேட்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் முடிவடைந்து விட்டன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) ; and

2. The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972).

(2) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு செல்லுபடியாகும் வகையில் நேமகம் செய்யப்பட்ட வேட்பாளர் திரு. எம். இராமநாதன், எம். எல். சி., அவர்கள் ஒருவரே. அவர் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நான் இதனால் மேலவைக்கு அறிவிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

கோவை மாவட்டத்தில் பிச்சானூரில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் காலவரையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பிச்சானூரில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் காலவரையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், அங்குள்ள பொதுமக்கள் மாற்று ஏற்பாடு செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளனர் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பிச்சானூரிலுள்ள சர்வதேச உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களும் கோயம்புத்தூர் மாவட்ட ஆசிரியர்கள் சங்கமும், பள்ளியின் தாளாளர் திரு. வி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் மிகுந்த இடர்ப்பாடுகளைச் செய்து வருவதாக மனுக்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். இம் மனுக்களில் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தரவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

(அ) குடிநீர் வசதியில்லை.

(ஆ) விஞ்ஞானக் கூடமில்லை,

(இ) சிறுநீர் கழிப்பிட வசதி அமைக்கவில்லை,

(ஈ) கணித ஆசிரியர் இல்லை,

(உ) கீழ்வகுப்புகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை,

(ஊ) பள்ளியில் பாதுகாவலர்கள் இல்லை.

பள்ளிக் கல்வி இயக்குநருடன் கலந்தாலோசித்ததில், பள்ளியில் பணிபுரிபவர்களுக்கு ஏப்ரல் 1972 முதல் சம்பளம் பள்ளி நிர்வாகத்தினர் மூலம் கொடுக்காமல் மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக வழங்கலாம் என பரிந்துரை செய்தார். இப்பரிந்துரையை ஏற்று அரசு தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில் மேற்படி பள்ளியின் ஆசிரியர்களும் மாணவர்களும் கடந்த 17—7—1972 முதல் நிர்வாகம் மாற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து காலவரையரையின்றி வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். மாணவர்களின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாணவ பிரதிநிதிகள்,

1972 ஆகஸ்ட் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பொதுமக்கள், ஆசிரியப் பிரதிநிதிகள், பள்ளித் தாளாளர் திரு வி. ஈஸ்வர மூர்த்தி ஆகியோர் கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று கோவை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் 5—8—1972 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் பள்ளியை நிர்வகிக்க தனிக் கமிட்டி ஒன்று ஏற்படுத்த வேண்டு மென கூறப்பட்ட யோசனையை பள்ளியின் தாளாளர் திரு வி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாணவர்களின் படிப்பு தடை படாமல் இருக்க இக் கூட்டம் ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை பிச்சானூரில் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது. பள்ளிப் பராமரிப்புக்காக ரூ. 10,000 செலுத்துவதாகவும், பள்ளிக்கு 6 ஏக்கர் நிலம் நன்கொடையாகக் கொடுக்கவும், பள்ளிக்குப் புதிய நிலத்தில் கட்டிடம் கட்டித் தரவோ அல்லது ரூ. 12,500 கட்டிட நிதிக்காக கட்டவோ பள்ளிக் குழுவினர் ஒப்புதல் அளித் துள்ளனர். மேலும் பள்ளியை தற்காலிகமாக நடத்த திரு. மயில்சாமி கவுண்டர் அவர்கள் தங்கள் நெல் அரைவை ஆலையில் வகுப்புகள் நடத்த ஒப்புதல் அளித்துள்ளார்.

பிச்சானூரில் ஒரு அரசினர் உயர்நிலைப் பள்ளியை 6 முதல் 11 படிவங்க ளுடன் வழக்கமான நிபந்தனைகளின் பேரில் 1972-73-ம் ஆண்டு திறக்க அனுமதி வழங்கலாம் என்றும், தற்சமயம் சர்வ தேச உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர், மற்றும் ஆசிரியரல்லாதார் இவர்களில் விருப்பமுள்ளவர்களை உத்தேசிக்கப்பட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக பணியில் அமர்த்தலாம் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். அரசு இப்பரிந்துரையை ஏற்றுள்ளது. பள்ளி திறப்பதற்காக விதிக்கப்படும் நிபந் தனைகளை நிறைவேற்றுவதன் பேரில் அனுமதியை நடைமுறைப்படுத்த பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 1972-73-ம் ஆண்டில் பிச்சானூரில் 6 முதல் 11 படிவங்களுடன் ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.

[மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்—தலைமை]

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தையொட்டி மீண்டும் சில தொடர்பான விளக்கங்களைக் கல்வி அமைச்சரிடமிருந்து வேண்டுகிறேன். இந்த சர்வேதேசப் பள்ளி தாளாளர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸவரமூர்த்தி மாணவர்களிடத்தி லிருந்து வசூலித்த ரூ. 9 ஆயிரத்துக்கு மேற்பட்ட பணத்தைத் தவருகப் பயன்படுத்தியதாகவும், பல ஆசிரியர்கள் பல மாதங்களாகச் சம்பளம் பெறவில்லை யென்றும் பல ஆசிரியர்கள் அந்தப் பள்ளியில் பழிவாங்கப்பட்டிருக் கிருர்கள் என்றும் பரவலாக குற்றச்சாட்டுகளும் கிரிமினல் குற்றச்சாட்டு

களும் இருப்பதால் அரசாங்கம் தீவிரமான விசாரணை செய்து தாளாளர் மீது நடவடிக்கை எடுக்க தீவிர முயற்சி மேற்கொண்டால், இது போன்ற தனியார் பள்ளிகளில் பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது என்றால், தனியார் பள்ளிகளில் குறைபாடுகள் ஏற்படுவதைத் தடுக்க ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுமுன் ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். பொதுவாக ஒரு அங் கத்தினரைப் பற்றிய விஷயம். அவர் இல்லாத நேரத்தில் அவர் மாணவர் களிடமிருந்து வாங்கிய ரூ. 9 ஆயிரத்தைப் பயன்படுத்திக் கொண்டார் என்று சொல்லுவது சரியல்ல. அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது குற்றச் சாட்டுகளைச் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லி ஒரு அங்கத்தினரை அகௌரவப் படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. அப்படி யிருந்தால் அமைச்சர் அவர்களே தன் விளக்கத்தில் சொல்லியிருப்பார்கள். பொதுவாக இம்மாதிரிக் கவன ஈர்ப்பு வரும்போது, மறுமுறை கேள்வி கேட்பது விதிக்கு அப்பாற்பட்டது. அமைச்சர் அவர்கள் முதலில் சொல்லி யிருக்கலாம். அங்கத்தினர் கேட்பது சரியில்லையென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தாளாளர் என்று சொன்னால் மட்டும் போதும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது சில விளக்கங்கள் தந்தேன். அதன் பிறகு அவர் பள்ளியினுடைய தாளாளர் மீது குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி விவரக் குறிப்பு எதுவும் என்னிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்குமானால், உள்ளபடியே விசாரிக்கப்படவேண்டிய ஒன்றுதான். குற்றச்சாட்டுகள் மீது தக்க நடவடிக்கை கல்வித் துறையினர் எடுத்துக் கொள்ளுவார்கள். இப்போது அங்குள்ள பள்ளி நடைபெறாமல் இருக்கிறது. அந்த சூழ்நிலையை அகற்ற என்ன செய்யலாம் என்று தாளாளர் அவர்களை வைத்து சமாசமான முடிவு செய்யப்பட்டது. அந்தக் கமிட்டியை மாற்றி அமைக்கச் சொன்னார்கள். அதற்கு தாளாளர் இணங்கவில்லை. ஒரு தனிப் பள்ளி வைப்பதற்கு ஆட்சேபணையில்லை என்று சொல்லிவிட்டார். அதன்

பேரில் பணி துவங்கப்பட இருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டுகளைத் தாங்களாக அங்குள்ள மக்கள் எழுதியனுப்பியிருந்தால், அதன் மீது பரிசீலனை செய்து விசாரணை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் : அதன் மீது விவாதம் நடத்த முடியாது.

திரு. செ. முத்துசாமி : ஒரு விளக்கம்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : அனுமதிப்பது இல்லை. மற்ற அங்கத்தினர்கள் பேசுவதாக இருந்தால் விவாதம் ஆகிவிடும்.

திரு. செ. முத்துசாமி: வேறு விளக்கம் தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் : கவன ஈர்ப்பு கொண்டு வந்தவர் தான் விளக்கம் கேட்கலாம். முன் கூட்டியே அறிவிப்பு கொடுத்து அனுமதி பெற்றிருந்தால் அனுமதிக்க முடியும். ஒவ்வொரு விஷயத்தையும் கேட்டுக் கொண்டே போகலாம். இப்போது துணை அறிக்கையின் மீது விவாதம் தொடங்கும்.

4. 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த துணை விவர அறிக்கை மீது விவாதம்.

* **திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு இடமில்லாதபடி நல்ல சூழ்நிலையில் இந்த விவாதத்தை ஆரம்பிக்கிறேன் என்று கருதுகிறேன். தங்களுடைய அனுமதியுடன் ஒரு சில விஷயங்களை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உறுப்பினர்கள் 'One Man Commission Anomalies Report' வேண்டுமென்று துடிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அதை என்னுடைய பேச்சிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். முரண்பாடுகள் குழு சிபாரிசுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசின் நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எல்லோரும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 136 ஆயிரம் பேர்களுக்கு ரூ. 4 கோடி செலவுக்குத் தயங்காதபடி சிப்பந்திகள், ஊழியர்கள் நலனுக்காக அரசு செலவழிக்க முன்வந்துள்ளது. அதைப் பாராட்ட வேண்டும். அன்று செய்தித் தாளில் பார்த்தவுடன் எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நம்பினோம். ஆனால் இப்போதும் மேலும் கடிதம்

வரும்பொழுது, ஒரு முரண்பாட்டைத் தீர்க்கும்பொழுது, வேறு சில முரண்பாடுகள் வந்துவிட்டனவோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. ஆகவே தான் உறுப்பினர்கள் அந்த 'ஒன் மேன் கமிஷன்' பரிந்துரைகள் அடங்கிய ரிப்போர்ட்டைத் தங்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்குமே என்று கூறுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைபாடுகளைச் சீக்கிரம் தீர்த்து வைத்ததற்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் இன்று நான் இவ்வலுவலகத்தில் நுழையும்போது நண்பர்கள் 'கறுப்பு பாட்ச்' அணிந்திருந்தார்கள். என்ன காரணம் என்று கேட்டபோது, தகுதிக்கொப்ப ஊதியம் இருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். கொடுத்தது போதாது என்று வருந்துகிறார்கள் சிலர். ஒன்றுமே கொடுக்கவில்லையே என்று கேட்கிறார்கள் சிலர். இப்படி இருக்கிற சூழ்நிலையில் இதை முடிவான பரிந்துரையாகக் கருது வதற்கு இல்லையென்று தெரிகிறது. ஆகையால் ஒரு பாரபட்சமற்ற—இப்போது பாரபட்சம் இருக்கிறது என்று சொல்லவில்லை—எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பெரிய அதிகாரி, முடியுமானால் ஒரு நீதிபதியைக் கூட சொல்லலாம், ஒரு ஹைகோர்ட் நீதிபதி போன்றவர்களிடம் முழுவதையும் ஒப்படைத்து இனி மேலாவது இம்மாதிரி முரண்பாடுகள் இல்லை, அதிருப்தி இல்லை, ஒழித்து விட்டோம், எத்தனை எத்தனை கோடியானாலும் பரவாயில்லை என்ற சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கருதுகிறேன். பி.டி. ஆசிரியர்களுக்கு எதிர்பார்த்த அளவு கொடுக்கவில்லையே என்ற வருத்தம். செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ஒன்றுமே கொடுக்க வில்லையே என்று வருத்தம். செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் குறை நியாயமானது என்று நான் கருது கிறேன்.

இத்தனை ஆண்டுகள் கேட்டுக்கொண்டு வந்தது, எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு ஒருவர் குமாஸ்தாவாக நுழைந்தால், அவருக்கு 200 ரூபாய் என்றால், அத்தோடு இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று மற்றொருவர் ஆசிரியராக இருக்கக்கூடிய நிலை இருந்தால், அவருக்கு இரண்டு இன்கிரிமெண்ட் கொடுக்க வேண்டும் என்பது. இரண்டாவது ஊதியக் கமிஷன் அதை ஏற்றுக்கொண் டிருந்தது. குமாஸ்தாவுக்கு 200 என்று ஆரம்பித்தபோது, ஆசிரியருக்கு 210 என்று ஆரம்பிக்கின்ற நிலை இருந்தது. ஆனால், இப்போது மற்றவர்களுக்கு ரூ. 210 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று வருகிற ஆசிரியருக்கும், ரூ. 210-லேயே இருக்கிறது. கீழே இருக்கிறவர்கள் உயர்ந்து வரட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அதே சமயம், வேலை உள்ளவர்களுக்கும் இரண்டு இன்கிரிமெண்ட் ஆக்கியிருந்தால், அத்தனை ஆண்டுகள் வைத்த நியாயமான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆகும். ஆனால், இந்த முரண்பாட்டைப் பொறுத்த

வரையில், இது நிராகரிக்கப்பட்டதாக அர்த்தமாகிவிடாது என்று கருது கிறேன். இதே முரண்பாடு, ஒரு தலைமை ஆசிரியருக்கும், ஒரு ஆசிரியருக்கும் இருக்கிறது. ஆகவே, இதை மறுபடியும் தீர விசாரிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சருடைய அறிக்கையில் ஓய்வு ஊதியம் பற்றி அழகாகக் கூறி னார்கள். ஓய்வு ஊதியத்திலும் இருக்கக் கூடிய குறைபாடுகளை நீக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். 1970-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு முன்னால் ஒருவர் ஓய்வு பெற்றிருந்தால், அவருக்கு ஓய்வு ஊதியம் ரூ. 30. மறுநாள் ஓய்வு பெற்றால் ரூ. 75 என்று இருக்கிறது. அதை நீக்கி விட்டார்கள். இதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சருடைய பேச்சில் அழகாகக் கூறினார்கள். குறைந்தபட்ச ஓய்வு ஊதியத்தை ரூ. 40 ஆக உயர்த்திய ஒரு செலவும் தீர்மானத்தில் அடங்கியிருக் கிறது. ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கு இனி, அகவிலைப் படியாக, ரூ. 5-ஐக் கொடுக்க அரசு அனுமதித்துள்ளது என்று கூறினார்கள். இதற்குரிய குறிப்புகளை இங்கே பார்க்கிறேன். பக்கங்கள் 29, 30-இல்—தமிழில்—இருக்கின்றன. ஓய்வு ஊதியம் ரூ. 40 ஆக இருக்கிற எல்லோருக்கும் ரூ. 5 கிராக்கிப் படியாக உண்டு என்று இருக்கிறது. ஆனால், உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எடுத்துக் காட்டிய குற்றச்சாட்டு உண்மை என்று கூற விரும்புகிறேன். உபகேள்விகள் கேட்கிற நேரத்தில் சிலருக்கு அந்த ரூ. 40-லேயே அந்த ஐந்தும் அடங்கி விட்டது என்று அரசு ஆணையிட்டிருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். இது அரசின் கொள்கைக்கே விரோதமாக இருக்கிறது. இது மிகச் சிறிய தொகை ரூ. 40 ஓய்வு ஊதியம் பெறுகிறவர்கள் அதை விட ரூ. 5-ஐ, அகவிலைப் படி என்கிற அளவில் பெறுவார்கள் என்று திட்டவட்டமாக முதலமைச்சர்கள் இங்கே கூறியிருக்கிறபோது ரூ. 35-ம், அதற்குக் கீழேயும் பெற்றுக்கொண்டிருந் தவர்களுக்கு மொத்தம் ரூ. 40 தான் என்று சொல்வது நியாயமானதல்ல என்று கருதுகிறேன். ரூ. 40 என்பது குறைந்தபட்ச ஓய்வு ஊதியம்—அது எல்லோ ருக்கும் இருக்க வேண்டும். ஒருவர் ரூ. 30 பெற்றுக் கொண்டிருந்தால், அதை ரூ. 40 ஆக உயர்த்தி அகவிலைப் படி ரூ. 5-ஐயும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். 40-ம், 5-ம் சேர்த்து 45 ஆகக் கொடுக்க வேண்டும். எனவே, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதில் அடங்கியிருப்பது ரூ. 5 தான். அவர்கள் வாதாடுவ தெல்லாம், முன்பு ரூ. 35 வாங்கிக்கொண்டிருந்தால், இப்போது ரூ. 5-ஐயும் சேர்த்து ரூ. 40 தான். ரூ. 36 வாங்கிக் கொண்டிருந்தால் ரூ. 41 ஆகிறது. ரூ. 37 என்றால், ரூ. 42 என்று ஆகிறது. இதை மாற்றி எல்லோருக்கும் ரூ. 40-ம், 5-ம் ஆக ரூ. 45 குறைந்த பட்ச ஊதியம். குறைந்த பட்ச ஊதியம்

ரூ. 45 வாங்காதவர்கள் யாரும் இல்லை என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சுக்கு நன்றி செலுத்த வேண்டிய இந்த உரைக்கு ஏதுவாக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அடுத்து, அரசு பிறப்பிக்கின்ற ஆணையைக் காண்பித்தால் கூட மாவட்டங்களில் நடவடிக்கை எடுப்பதில்லை என்கிற கேவல நிலைமை இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தீவிரமாக அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். 1—6—1970-க்கு முன்னால் ஓய்வு ஊதியம் பெறுகிற எல்லோருக்கும் ஒரு மாத ஓய்வு ஊதியம் போனசாகக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த ஆணை போடப்பட்டு எல்லா மாவட்டங்களிலும் ஓய்வு பெற்றோர் எல்லோருக்கும் ஒரு மாத போனஸ் கொடுக்கப்பட்டு விட்டது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற 1—6—1970-க்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இந்த போனசை இன்னும் கொடுக்கவில்லை. சப்-டிரஷரி ஆபீசில் கேட்டால், "இதை ஏற்றுக்கொள்வதற்கில்லை, எங்களுக்கு இன்னும் பிரத்யேக ஆணை வரவில்லை" என்று கூறுகிறார்கள். பிற மாவட்டங்களிலே எல்லாம் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்திலே தான் கொடுக்கப் படாத இந்தச் சூழ்நிலை இருக்கிறது. அரசு இதை ஆராய்ந்து கொடுக்காமலிருப்பதற்கான காரணத்தை அவர்களிடம் கோரி, பதிலைப் பெற்று தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி இலாகா சம்பந்தமாக ஒரு நல்ல குறிப்பை நான் காண்கிறேன். கல்வி இலாகாவில் நூலகங்களின் இயக்குநர் என்று ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பார்க்கிறபோது, பல காலமாகச் சொல்லிக்கொண்டிருப்பது அமுலாகி வருகின்றது என்பதைப் பார்த்து நான் பூரிப்படைகிறேன். இருந்தாலும் நான் ஒன்றைச் சொல்லாமலிருக்க முடியாது. 1965-க்கு முன்னால் ஒரே ஒரு கல்வி இயக்குநர்—டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் என்று இருந்தார். அத்தனை கல்வி நிலையங்களும் அவரிடம் தான் இருந்தன. மருத்துவக் கல்லூரியிலிருந்து, பாலிடெக்னிக்கிலிருந்து எல்லாக் கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் ஆரம்பப் பள்ளிகளும் அந்த ஒரே ஒரு இலாகாவிடம் இருந்தன. அதனால் பெரும் குறைகள் ஏற்பட்டன என்று கூறவில்லையென்றாலும், அவ்வளவு பெரும் சுமையை அவர் ஒருவர் பேரில் சுமத்துவதா என்று அரசு எண்ணித்தான் அந்த இலாகாவைப் பிரித்தார்கள். உயர் கல்வி இயக்குநர் என்று பிரித்தார்கள். இப்போது, 163 கல்லூரிகளுக்கு ஒரே ஒரு இயக்குநர் தான் இருக்கிறார். 2,600 உயர்நிலைப் பள்ளிகளும், 32 ஆயிரம் தொடக்கப் பள்ளிகளும் இருக்கின்றன. இத்தனைக்கும் ஒரே இயக்குநர் என்? அதை இரண்டாகப் பிரித்தால் அவருடைய பொறுப்பு குறையும் அல்லவா?

தொடக்கப் பள்ளிகள் பற்றி எத்தனையோ புகார்கள் வருகின்றன அல்லவா? அவற்றை ஒருவரே கவனிக்க முடியுமா? எனவே இந்த அலுவல்களையெல்லாம் நிர்வகிப்பதற்கு பிரத்தியேக Director of Elementary Education தேவை என்றே கருதுகிறேன். அதே சமயம், ஒரு பொது நூலகங்கள் இயக்குநர் மாத்திரம் சென்னையில் இருந்து செயல்படுவதால், நூலகங்கள் எல்லாம் செவ்வனே நடைபெறும் என்று கூறுவதற்கில்லை. நூலகங்களுடைய முக்கியத் துவத்தை அடிகளார் அவர்கள் கூறினார்கள். மாவட்டங்களில் எல்லாம் நூலகங்கள் தோன்ற வேண்டும். கல்லூரி செல்கிறவர்கள் கல்லூரி முடிந்த பிறகு நூலகங்களுக்குச் சென்று அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது மாநிலத்தில் சிறந்த நூலகத் திட்டம் இருக்கிறது. அதை அமுல்படுத்த வேண்டும். நூலகங்களை இன்றைய தினம் மாவட்டக் கல்வி அதிகாரியிடம் ஒப்படைத்திருக்கிறோம். அவர் கல்வி அலுவல்களைப் பார்ப்பாரா, இதைப் பார்ப்பாரா என்றே புரியவில்லை. நம் மாநிலத்தில் மாநில அளவில் ஒரு இயக்குநரை ஏற்படுத்தியிருப்பதைப் போலவே ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில இயக்குநரின் கீழ் செயல்படக் கூடிய பிரத்தியோகமான மாவட்ட நூலா அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்து, 32-ஆம் பக்கத்தில், அரசு அச்சகத்தில் சீக்கிரமாக வேலை செய்வ தற்காக புதுப் பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம், வர வேற்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் கூறினார்கள், சட்டமன்ற நடவடிக்கைகள் எல்லாம்—இன்று வரை—முதல் முறையாக இந்தக் கூட்டத் தொடர் வரை அச்சடிக்கப்பட்டு நமக்கெல்லாம் கொடுக்கப்பட்டுள்ளன என்பதற்காகப் பாராட்டினார்கள். இந்த அச்சகத்தில் வேலை செய்கிறவர்களை எல்லாம் கட்டாயம் பாராட்டத் தான் வேண்டும். ஆனால், ஒரு குறையை மாத்திரம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். எல்லா ஆசிரியர்களுக்கும், ஒரு ஆசிரியர் பதவியில் நுழைந்து ஓய்வு பெறும் வரை—அவர்கள். உடன் வைத்திருந்து தீர வேண்டியது, 'டீச்சர்ஸ் சர்வீஸ் ரெஜிஸ்டர்' என்பது. இது சில ஆண்டுகளாக கிடைக்காமல் இருக்கிறது. ஆனால் இந்த ஆசிரியர்களுடைய 'ஸர்வீஸ் ரெஜிஸ்டர்' இல்லையென்றால் வேலையைவிட்டு என் நீக்கக்கூடாது என்று அதிகாரிகள் ஆணையிடுகின்றார்கள். நேற்றுக்கூட நான் 'போன்.' மூலம் தொடர்பு கொண்டு அரசு அச்சகத்தில் விசாரிக்கும்போது, 'இன்னும் அச்சில்தான் இருக்கிறது' என்று கூறுகின்றார்கள். இந்தச் சிறிய புத்தகத்தை அச்சிட்டு வழங்குவதற்கு இவ்வளவு காலம் ஆக வேண்டியதில்லை. எனவே ஆசிரியர்களுக்கு மிகவும் அத்தியாவசியமான இந்த ஸர்வீஸ் ரெஜிஸ்டரை காலதாமதமில்லாமல் அச்சடித்துக்கொடுத்து உதவ வழி செய்ய வேண்டு

மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களை இந்த மேலவையில் வைப்பதில் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பணியாற்றும் பல்வேறு அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வினை வழங்கியிருப்பது பல தரப்பினருடைய நீண்டகாலக் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது என்று அதைப் பெருமையோடு வரவேற்று அதே நேரத்தில், இன்னும் தங்கள் குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும், இன்னும் ஏராளமான முரண்பாடுகள் இருப்பதைக் களைய வேண்டும் என்ற அவர்களது கோரிக்கையை மீண்டும் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். எப்போதும் பழுத்த மரத்தில்தான் கல்லடிப்பார்கள். அது இயற்கை. 'இந்த அரசு கேட்பதைக் கொடுக்கும். நியாயமான கோரிக்கைகளைக் கவனித்து அவற்றிற்கு செவிசாய்க்கும்' என்ற காரணத்தினால் தான் 1967-க்கு முன்பு அடங்கிக் கிடந்த சமுதாயம், 1967-க்கு முன்பு எதையும் பேசுவதற்கு பயந்து அடங்கியிருந்த ஊழியர்கள், 1967-க்கு முன்பு தங்கள் கருத்துக்களைச் சொல்லாதவாறு அடக்கி வைக்கப்பட்ட ஆசிரியர்கள் சமுதாயம், இப்போதெல்லாம் தாங்கள் பின்பற்றும் வழி எதுவானாலும்கூட—தவருகவோ சரியாகவோ தாங்கள் அழைத்துச் செல்லப்பட்டாலும்கூட—இந்த அரசாங்கம் தங்களைக் கருணையோடு கவனிக்கும் என்ற நல்லெண்ணத்துடன் கோரிக்கையை வைத்திருக்கிறுர்கள்.

This is a Government in a welfare state
இது மக்களுக்காக உள்ள மக்களாட்சி. அந்த வகையில் இந்த அரசு சமுதாயத்தின் அடித்தட்டிலுள்ள பல்வேறு பகுதியினரைத் தூக்கிவிடுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்று அரசு அறிவித்துள்ள சலுகைகளைப் பல்வேறு யூனியன்களும் பாராட்டியிருக்கின்றன. நான் ஒவ்வொரு முறையும் இந்த மன்றத்தில் கூறிக்கொள்ளுவது, பாராட்ட வேண்டிய இடத்தில் தவருமல் பாராட்ட வேண்டும். Appreciation is a kind of Civilisation என்று கூடச் சொல்லுவார்கள். பாராட்ட வேண்டும் என்ற அந்தப் பண்பாடு தமிழ் நாட்டில் பலரது எண்ணத்தில் இருந்தாலும் கூட, அரசியல் தலையீட்டின் காரணமாக, பாராட்டுதல்கள் வெளிவராமல் இருக்கின்றன. நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்கியதில்லை என்பதைக் காண்பிப்பதுதான் இப்போது தனி நபர் குழு விடுத்துள்ள பல்வேறு பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதாகும்.

1972 ஆகஸ்ட் 22] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

இன்று இதை ஏற்றுக்கொண்டதையடுத்து பல்வேறு கோரிக்கைகள் மேலும் வரும். Every action has got a reaction and no action is the last. அந்த முறையில் எந்த ஒரு செயலுக்கும் முடிவேற்படுவதில்லை. அது தொடர்ந்து வரும். எனவே அவற்றையும் இந்த அரசு அனுதாபத்துடன் கவனிக்கும் என்ற நம்பிக்கையில் இதுவரை செய்தமைக்கு அரசினை மனமாரப் பாராட்டி வரவேற்கிறேன்.

அடுத்து நான் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் என்ற முறையில் ஒரு முக்கியமான விஷயத்தை, அதாவது கிராமப்புற இணைப்புச் சாலைகள் சம்பந்தமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தினை நான் உண்மையிலேயே பெரியதொரு வரப்பிரசாதமாகக் கருதுகின்றேன். விடுதலை பெற்று பல ஆண்டுகள் ஆனாலும் இன்னும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பல கிராமச் சாலைகள் நெடுஞ்சாலையோடு இணைக்கப்படாமலேயே இருக்கின்றன. இதனால் அவைகள் ஊராட்சி ஒன்றியங்களோடு முறையாக இணைக்கப் பெறாமல் இருக்கின்றன. ஆனால் இப்போது வந்துள்ள இந்தத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ பல கிராமங்கள் இணைக்கப்பட்டுவிடலாம் என்று கருத இடம் இருந்தது. ஆனால் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால், சற்று ஏமாற்றமே ஏற்படுகிறது. சரியான புள்ளிவிவரங்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படாத காரணத்தினால் கிடைக்க வேண்டிய பல நன்மைகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் "அரசாங்கம் பல சிறப்பான திட்டங்களை உருவாங்குகின்றது, ஆனால் அப்படி உருவாக்கப்பட்ட திட்டங்கள் பலன்கள் மக்களுடைய கரங்களுக்குப் போய்ச் சேருமளவிற்கு மாவட்டங்களிலுள்ள அல்லது வட்டங்களிலுள்ள அதிகாரிகள், ஒன்றியத்திலுள்ள அதிகாரிகள் அவற்றைச் திறமையுடன் நிர்வகிக்காமல் விட்டுவிடுவதால் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போய் விடுகின்றன" என்று குறிப்பிட்டார்கள். நான் இந்தத் திட்டத்தில் பெரியதொரு குறைபாடு இருக்கிறது என்று உண்மையிலேயே கருதுகிறேன். 1,500 மக்களுக்கு மேலுள்ள கிராமங்களுக்கே இணைப்புச் சாலைகள் போடவேண்டும் என்று இருக்கிறது. இதைக் குறிப்பிட்டிருப்பதால், சற்று மக்கள் தொகை குறைவாக இருப்பதால், சில கிராமங்கள், அவற்றுக்கு இணைப்புச் சாலை போட வேண்டிய அவசியம் எவ்வளவுதான் இருந்தாலும், விடப்பட்டுள்ளன. உதாரணமாக என்னுடைய ஊராட்சி ஒன்றியத்திலேயே, மேல் அளையனூர், கீழ் அளையனூர் என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. ஒன்றில் 1,400 மக்கள் தொகையும் மற்றொன்றில் 800 மக்கள் தொகையும் இருக்கின்றது. இவற்றின் இடையிலுள்ள தூரம் ½ மைல்தான் என்றாலும், இவற்றைத் தனித்தனி கிராமங்களாகக் கணக்கிட்டிருக்கின்றார்கள். இவற்றுக்கு

வேண்டிய முக்கிய சாலை எட்டு மைல் தூரத்தில் இருக்கின்றது என்றாலும், இந்த கிராமங்களிலிருந்து அதற்கு இணைப்புச் சாலை கிடையாது. குறிப்பிட்ட 1,500 மக்கள் தொகைக்குக் குறைவாக 1,400 என்றும் 800 என்றும் இருப்பதால், இணைப்புச் சாலை போடுவதற்கு இந்தக் கிராமம் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படாமல் விடுபட்டுப் போயிருக்கிறது. அருப்புக்கோட்டை தாலுக்காவில் உள்ள நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் மூன்று ஒன்றியங்கள் தான் இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. விடுபட்டுப்போன ஒன்றியத்தில் 200-க்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த ஒன்றியம் விடுபட்டுப் போய்விட்டது. மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைவதற்கு நான்கு கிராமங்களே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. காரணம், கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அனைத்தும் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு வேளை அதிகாரிகள் மீண்டும் இவற்றைப் பரிசிலனை செய்து விடுபட்டுப்போன கிராமங்கள், அடுத்தடுத்துள்ள கிராமங்கள், மக்கள் தொகை ஒன்றாகக் கணக்கிடப்பட வேண்டிய கிராமங்கள், இவற்றை மீண்டும் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்தால், உண்மையிலேயே நான் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த காரியங்கள் இப்போது நடைபெறுவ தாக எண்ணி மகிழ்ச்சியடைவேன். எனவே, இதை அரசு கவனிக்க வேண்டு மென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னும் ஒன்றைச் சொல்லுவதற்கு அனுமதி யளிக்க வேண்டுகிறேன். இப்போது தமிழகத்தில் திரைப்படங்களைப் போட்டுக் காண்பிக்கும் அரங்கங்களைக் கட்டுவதற்கு நிதி உதவி செய்வதற்கென ஒரு கழகம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. நமது நாட்டிலேயே எந்தத் துறையிலும் தமிழகமே முன்நிற்கின்றது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமாகும். வேறு எங்கும் ஆரம்பிக்கப்படாத நிலையில் இதை நமது தமிழகத்தில் ஆரம்பித்திருக்கிறோம். எதிர்க் கட்சியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் பல்வேறு மாநிலங்களிலே நடைபெறும் நடவடிக்கை களைக் கூர்ந்து கவனித்து வருபவர்கள். எனவே அவர்கள், எதிலும் சரி, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டமானாலும் சரி, கண் பார்வை யற்றவர்களுக்கு ஒளி கிடைக்கச் செய்யும் திட்டமானாலும் சரி, குடிசை மாற்று வாரியத்தை ஆரம்பித்து குடிசை வாழ் மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் திட்டமானாலும் சரி, கிராமங்கள்தோறும் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்யும் திட்டமானாலும் சரி, தமிழகமே முன் அணியில் இருக்கின்றது என்பதை நன்கு அறிவார்கள். பல்வேறு நல்ல திட்டங் களுக்குத் தமிழக அரசு பண உதவி அளித்து வருவது போல, திரைப்பட அரங்கம் கட்டுவதற்கும் நமது அரசு பணவுதவியளிக்க முன்வந்திருப்பது

பாராட்டுதற்குரியதாகும். ஆனால் அதே நேரத்தில் இவற்றுக்கும் சில விதி முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பெரிய பெரிய நகர்ப் புறங்களில் இப்படிப்பட்ட திரையரங்குகளைக் கட்டுவதற்கு இக்கழகத்திலிருந்து நிதி உதவியளிப்பதைத் தள்ளிவைத்து, கிராமப்புறங்களிலே திரையரங்குகளைக் கட்டுவதற்கே உதவி யளிக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 'பி' ஸ்டேஷன் 'ஸி' ஸ்டேஷன் என்றுள்ள இடங்களிலே மட்டும் திரையரங்குகளைக் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்க வேண்டும். இதோடு இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது தமிழக அரசு சிறந்த முறையில் செய்திப் படங்களைத் தயாரிக்கின்றது. நானும் ஒரு திரைப்பட அரங்கின் உரிமையாளர் என்ற முறையில் இதை விரும்பிச் சொல்கி றேன். மத்திய அரசு தயாரிக்கும் செய்திப் படங்களை நாம் கண்டிப்பாகத் திரையிடுகிறோம். அதற்கு நாம் பணம் கொடுக்கிறோம். அவர்களுக்கு இதனால் வருமானம் கிடைக்கிறது. ஆனால் தமிழக அரசு தயாரிக்கும் செய்திப் படங் களைத் திரையரங்குகளில் கண்டிப்பாகப் போட வேண்டும் என்ற நிர்ப்பந்த மில்லை. நான் விரும்புகிறேன், திரையரங்கத்திற்கு 'லைசென்ஸ்' வழங்கும் போதே, தமிழக அரசின் செய்திப் படங்களையும் கண்டிப்பாகக் காண்பிக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை லைசென்ஸுடன் சேர்த்துப் போட்டால், நமது அரசு ஆற்றும் பல்வேறு நற்பணிகளை மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இப்போதுள்ள நிலையில் பெரிய நகர்ப்புறங்களி லுள்ள அரங்குகளில்தான் போட்டுக் காண்பிக்கின்றார்களே தவிர, கிராமப் புறங்களிலுள்ள அரங்குகளில் போட்டுக் காண்பிப்பதில்லை. இதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு கருத்தை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். பத்தாண்டு காலத்திற்கு மேல் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணி யாற்றிய ஆசிரியப் பெருமக்கள் நீண்டகாலமாக நமது அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இப்போது நிர்வாகத்தில் அவர்களைப் பொறுத்த வரையில், இரட்டை ஆட்சி முறையிருக்கிறது. 'ஏ' விங் என்றும் 'பி' விங் என்றும் இரண்டு பிரிவாக வைத்திருக்கின்றார்கள். 'ஏ' விங்கிலுள்ள ஆசிரியர் களுக்குக் கிடைக்கும் வசதிகளும் சலுகைளும் 'பி' விங்கிலுள்ளவர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற குறைபாடு இருந்து வருகிறது. இந்த இரண்டு பிரிவின ரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே அதிகாரியின் கீழ், ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டார்கள் என்று சொல்லப்பட்டாலும், நிர்வாகத்திலுள் ளவர்கள் இன்னும் இவர்களை இரண்டு பிரிவினராகத்தான் நடத்திவருகின்

றுர்கள். எனவே இதை இலகுப்படுத்துவதற்கு இன்னும் புதிய புதிய சட்டங்களை மேலும் மேலும் போட்டுக் குழப்பாமல், இவர்களை மாவட்ட அளவிலாவது அல்லது மாநில அளவிலாவது ஒன்றுபடுத்தி, பதவி உயர்வு போன்ற நேரங்களிலே, அனைவரையும் ஒன்ருகப் பார்க்கத் திட்டமிட்டால், இப்போதுள்ள பல்வேறு குழப்பங்களுக்கு மாற்றம் காண முடியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் சொன்ன மாதிரி, ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகி வருகிறது. தனியார் பலர் ஆரம்பக் கல்வி நிலையங்களை வைத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருக்கும் பள்ளிகளுக்குத் தொல்லைகள் கொடுத்து வருகிறுர்கள். கல்வியினுடைய வளர்ச்சியைத் தடைப்படுத்தி வருகிருர்கள். அந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட்டு ஆரம்பக் கல்விக்கு ஒரு தனி இயக்குநர் போட்டு ஊராட்சி ஒன்றியங்கள், மற்ற அனைத்து ஆரம்பக் கல்விப் பள்ளிகளை சிறப்பாக நடத்த, உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் அரசு நடவடிக்கை எடுத்தால்தான் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி தடைபடாமல் நடைபெறும். இந்த வேண்டுகோளை அரசுக்குத் தெரிவிக்க நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். எப்படி ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்புச் சாலைகள் போடுவது அத்தியாவசியமோ, அதைப் போல் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு பள்ளிக்கும் தனிக் கட்டிடம் இருக்க வேண்டும். அந்த அளவுக்கு ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும். அந்தக் கட்டிடம் எந்த அளவுக்கு இருந்தாலும் பரவாயில்லை. அப்படிச் செய்தால், கிராமப்புற மக்கள் நன்றிக் கடனுடன் இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பட்டினத்தைப் பளபளப்பாக்கிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. சென்னைப் பட்டினத்தை அழகுபடுத்துவதோடு, கிராமப் புறங்களையும் வளர்ச்சியுறச் செய்ய அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த துணை விவர அறிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொண்டு பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மான்யக் கோரிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக கல்வித் துறையில் ஆரம்பக் கல்விக்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்பட வேண்டும் என்று எனக்கு முன்னல் பேசிய உறுப்பினர்கள் கூறியதை நான் அப்படியே முழு மனதுடன் வரவேற்கிறேன். ஆரம்பக் கல்வி நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு அந்தக் கல்வி நல்ல முறையில் முன்னேறுவதற்கான வகையிலும், கற்கும் சிறுவர், சிறுமியர்கள் நல்லபடி கற்று நல்ல அறிவு பெற்றுக்கொள்வ

தற்கும் அத்தகைய நிர்வாகம் அமைய வேண்டும். ஆகையினால் அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். முக்கியமாக இந்தத் துணை மான்யக் கோரிக்கை சம்பந்தப்பட்ட வரையில் பல்வேறு விஷயங்களைப் பற்றியதாக இருந்தாலும், எல்லாவற்றையும் பற்றிப் பேசாமல் கூட்டுறவுத் துறை ஒன்றை மட்டும் எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

கூட்டுறவுத் துறை கடந்த பல ஆண்டுகளாக அதனுடைய விதி முறைகள், சட்டங்கள் எல்லாம் திருத்தப்பட்டபோதெல்லாம் அதனுடைய நிர்வாக முறைகள் பல்வேறாக மாற்றப்பட்டு அதனுடைய குறிக்கோளும், அதனுடைய ஜனநாயக முறைகளும் வெகுவாக மாறுபட்டு வந்திருக்கின்றன என்பது என்னுடைய கருத்து. சட்டங்கள், விதிமுறைகள், துணை விதிகள் வகுக்கப்பட்டன. அப்போதெல்லாம் என்னுடைய கருத்தைக் கூறி வந்திருக்கிறேன். மாநில அளவிலும், ஜில்லா அளவிலும், ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கிகள் அளவிலும் உப விதிகள் வகுக்கப்பட்டபோதெல்லாம், தேர்தல் முறைகள் எல்லாம் மாற்றப்பட்டு, அவைகளுக்காகப் பிரதிநிதித்துவ முறைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டன. இது எந்தவித நல்லெண்ணத்தோடும் பொது அக்கறையோடும் செய்ததல்ல, உள் கருத்தோடு செய்யப்பட்டிருக்கின்றது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக சென்ட்ரல் சொசைட்டிகள் என்று சொல்லி கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமாக சில திருத்தங்கள் சில மாதங்களுக்கு முன்னால் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த சென்ட்ரல் சொசைட்டிகளுக்கான தேர்தல் முறைகள், பிரதிநிதித்துவம் எல்லாம் மாற்றப்படுவதற்காக உப விதிகள் ஜூலை மாத இறுதியில் வந்து ஆகஸ்டு மாதம் வெளி வந்துள்ளன. இன்னும் சபையில் அவை வைக்கப்படவில்லை என்று கருதுகிறேன். அதைப் பார்க்கும்போது, நான் முன்பு கூறியது போல், எப்படி மாநில அளவில் உள்ள பாங்குகளுக்கு நிலைமை ஏற்பட்டதோ அதே போன்று இந்த சென்ட்ரல் சொசைட்டிகளும் போனாலும் போகும். முதன் முதலாக பிரைமரி லாண்ட் டெவலப்மென்ட் பேங்க்ஸ்—ஆரம்ப நிலவள வங்கிகள் என்பதற் கெல்லாம் ஒரு சில விதிமுறைகள் மட்டும் செய்யப்பட்டிருக்கின்றன என அறிகிறேன். ஒரு ஆரம்ப நில வள வங்கிக்கு இரண்டு பேர் கடன் வாங்காத மெம்பர்களோடு ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருப்பார்கள். ஆக மொத்தம் 9 பேர் நிர்வாக சபையில் இருந்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது செய்யப்பட்டுள்ள விதியின்படி, இரண்டு பேர் கடன் வாங்காத மெம்பர்களை நீக்கிவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏழு பேர் என்றும், மற்ற நியமனப் பிரதிநிதித்துவம் 9 பேர் என்றும் இருக்கிறது. அதை அநேகமாக நியமனம் செய்யப்படுபவர்களாகத்தான் வைத்துக் கொள்ளலாம். அப்படித்தான் இந்த விதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள

விரும்புகிறேன். நான் மாநில முழுமைக்குமாக விவரங்கள் கூற முடியாது. ஸ்ரீவில்லிபுத்தூரை எடுத்துக் கொண்டால், அந்தத் தாலுக்காவில் இரண்டு லிப்ட் இரிகேஷன் சொசைட்டிகள் பதிவு செய்யப்பட்டதாகக் கேள்விப் பட்டேன். அவை எந்த இடத்தில் என்பது எனக்குத் தெரியாது. ஸ்ரீவில்லி புத்தூர் தாலுக்கா நில வள வங்கியில் மூன்று மெம்பர்கள் இந்த லிப்ட் இர்ரி கேஷன் சொசைட்டியின் பிரதிநிதிகளாக அங்கம் வகிப்பார்கள். இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் சர்விஸ் சொசைட்டிகள், அதாவது விவசாயக் கருவிகள் கொடுத்தல், இயந்திரங்கள் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்காக உள்ளவை, அதன் மூலமாக ஒரு பிரதிநிதி வருவார் என்று கூறப்பட்டிருக்கிறது. வட்டாரம் தோறும் அந்த சொசைட்டிகள் அமைக்கப்போவதாகக் கூறினார்கள். ஒரு பிளாக்கில் மட்டும்தான் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிறது. சென்ட்ரல் கோவாப்பரேடிவ் பாங்கிற்கும் இந்த ஆரம்ப நில வள வங்கிக்கும் எந்த வித மான ஸ்தானப் பிராப்தியும் இல்லை, எந்த விதமான தொடர்பும் இல்லை. எதற் காக இந்த ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கியிலிருந்து ஒரு பிரதிநிதியாக வரு கிறார், மாநில நில வள வங்கியிலிருந்து ஒருவர் பிரதிநிதியாக வருகிறார் என்றால், அதற்குத் தொடர்பு இருக்கிறது. அதை ஒத்துக்கொள்ள முடியும். இதைத் தவிர மாநில கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் மூன்று மெம்பர்களும் அரசாங் கத்தின் சார்பில் நியமனம் செய்யப்படுவார்கள். இப்படிப் பார்க்கும்போது ஒன்பது பேர் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் என்று இருந்தது ஏழாகி, இப்பொழுது 9 பேர் அநேகமாக நியமனம் செய்யப்படுவார்கள். ஆக மொத்தம் 16 பேர் ஆரம்ப நில வள வங்கியில் நிர்வாக சபையில் அங்கம் வகிக்க இருக்கி றார்கள். இந்த மாதிரியாக முன்னால் மாநில அளவிலும், ஜில்லா அளவிலும் செய்யப்பட்ட முறை போன்று இந்த ஆரம்ப நில வள வங்கிகளில் ஜனநாயக முறைக்கு முரணாக, எந்த வகையிலும் நியாயமாக ஒத்துக்கொள்ளத்தகாத வகையில், இந்த நியமனங்களைச் செய்வதற்காகத் திட்டமிட்டுச் செய்யப்பட்டு வருகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இம்மாதிரியான காரியங்களைத் திட்டமிட்டுச் செய் வதில் ரொம்ப வல்லுநர் என்பதில் சந்தேகமில்லை. முன்னால் எப்படிச் செய்து கொண்டு வந்தாரோ, அதே முறையில்தான் இந்த சென்ட்ரல் சொசைட்டியி லும் செய்யப்படுகிறது. இது கிராம அளவிலும் போகுமோ என்னவோ நமக் குத் தெரியாது. சில பேர் சொல்வார்கள். எங்களுடைய ஊரில் ஒருவர் இருந்தார். அவர் இப்பொழுது இல்லை. எப்பொழுதும் கோர்ட்டு, கோர்ட்டு, வழக்கு என்றே போய்கொண்டிருப்பார். எப்பொழுதும், வில்லங்கம், வழக்கு என்று ஈடுபட்டுக் கொண்டிருந்தால்தான், எனக்கு ஆயுள் நீடிக்கும் என்று சொல்வார் என்று சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது செய்யப்பட்டு வருவது வில்லங்கம், விவகாரமாக இருக்கிறதே தவிர, நிர்வாகத்

திற்கு உறுதுணையாக இந்த விதிகள் அமைந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, வில்லங்கம், வழக்குகள் இருந்தால்தான் யாருக்கோ ஆயுள் நீடிப்பதாகச் சொல்வார் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகையினால் அது போன்ற நம்பிக்கையில் தான் அங்கத்தினர் இருக்கின்றாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பெயரை அது சம்பந்தமாக ஒப்பிட்டுச் சொல்லி, வருவாய்த்துறை அமைச்சர் சந்தோஷம் அடைய விரும்புகிறார். அதை நான் வரவேற்கிறேன்.

நான் சொன்னவற்றையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் இந்தக் கூட்டுறவுத் துறை எப்படி சீரழிக்கப்படுகிறது என்பதுபற்றிப் பேசியிருக்கிறேன். இப்பொழுது அதே முறையில்தான் சீர்கேடு அடைந்து வருகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். கடன் வழங்கும் நிலைமையிலும் கூட பல நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு வருவதை நான் பார்க்க முடிகிறது. சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள சங்கடங்களைப் பார்த்தால் இன்னும் என்னென்ன ஏற்படுமோ என்ற கவலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் நாங்கள் கோடி, கோடி ரூபாயாக வைத்துக்கொண்டிருக்கிறோம். நிலவங்கி நிர்வாகிகள்தான் வாங்கி உங்களுக்குக் கொடுக்காமலிருக்கிறார்கள். ஆகையினால்தான் மேலும் கடன் கொடுத்து உதவ முடியவில்லை என்று சொல்லி வருகிறார். ஆகையினால் அந்த மாதிரி பேசும் போது, நாங்கள் வாய் மூடி மௌனியாக இருக்க வேண்டியிருந்தது. அந்த மாதிரி மலிவாகக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது விதிகள் சம்பந்தப்பட்ட வரை, மறுபடியும் அவற்றை நன்றாக ஆராய்ந்து, ஜனநாயக முறைக்கு மாறான வகையில் வரும் விதிகளை வேறு விதமாக மாற்றுவதற்கான நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சென்டிரல் சொசைட்டிக்குச் சொல்லியிருக்கிறது. மொத்த நாமினேஷன் 1/5 பங்குக்கு அதிகரிக்கக் கூடாதென்று சட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது நாமினேஷன் 1/5 பங்குக்கு அதிகமாக இருக்கிறதென்று சொல்கிறாரா அல்லது குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறாரா? நாமினேஷன்

முறை சரியானது. அது 1/5-க்கு மேற்படக் கூடாது. இரண்டாவதாக, நாமி னேஷன் செய்யப்படுகின்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், இதுவரை இயக்குந ராக இருக்க அருகதை அற்றவர்கள் என்று கருதப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந் திருக்கிறார்கள். ஹைகோர்ட் வரை பல முறைபோய், இது முற்றிலும் சரி என்று தீர்ப்பாகியிருக்கிறது. அதில் மீண்டும் ஏன் தவறு காண வேண்டும்?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: 1/5 பங்கில் 3 பேரை ரிஜஸ்ட்ரார் நியமிக் கிறார் என்கிறார். 1/5-க்குக் குறைவாக இருக்கிறது என்று காட்டி நியாயம் கற்பிக்க முயலுகிறார். மொத்த ஸ்தானங்கள் 15 : 25 என்று வைத்துக்கொண் டால், 3 பேர் என்பது குறைவாகத் தான் இருக்கும். 16 எப்படி வந்தது? அந்த 16 ஸ்தான மெம்பர் ஸதாபனம் எங்கே இருக்கிறது? ஒன்றிரண்டு லிப்ட் இரிகேஷன் சொசைட்டி ஒரு தாலுகாவில் இருக்கிறது. ஆரம்ப நிலவள வங்கி இருக்கிற இடத்தில் அதற்கு மூன்று ஸ்தாபனங்கள் என்றால், இம்மாதிரி 16 ஸ்தானங்களைக் கொண்டு அதில் 3 பேரை ரிஜிஸ்ட்ரார் 'நாமினேட்' செய்வது என்பது நியாயமா என்று கேட்கிறேன். வட்டாரந்தோறும் நில வள வங்கிகளை ஆரம்பிக்கும் திட்டம் என்னவாயிற்று என்று கேட்க விரும்பு கிறேன். நிறைவேறி விட்டதா? மத்திய கூட்டுறவு பாங்குகளையும் மாநில நில வள வங்கியையும் கைப்பற்றுவதற்கு இதை ஒரு கருவியாகப் பயன்படுத் திக்கொள்வதா? பெயருக்குச் சில வங்கிகளை ரிஜிஸ்டர் செய்து விட்டு, அது வும் டிசம்பர் 27-ம் தேதி மாநில சர்க்கார் ஒரு உத்தரவு ஜி.ஓ. பிறப்பிக்கும். அதே தேதியில் இராமநாதபுரத்தில் 7 நில வள வங்கிகள் ரிஜிஸ்டர் செய்யப் பட்டன என்று அந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கிறேன். இவ்வாறு ஆரம்ப பாங்கிகளை சில இடங்களில் நிறுவி விட்டு மத்திய, மாநில பாங்குகளைக் கைப்பற்றிய பிறகு, 100-க்கு மேல் சில பாங்கிகள் ஆகி விட்டன. பாக்கி 250 பாங்கிகளும் வட்டாரங்களில் ஏன் நிறுவப்படவில்லை? ஏன் ஸ்ரீவில்லிபுத்தூரில் நிறுவப்படவில்லை? முயற்சித்தார்களா? அவர்கள் கட்சிக்காரர்களைக் கேட்கிறேன். அவசியமில்லை என்று சொன்னார்கள். அதற்கான செல்வாக்கு அவர்களுக்கு மக்களிடத்தில் இல்லை. அமைப்பது நியாயமில்லை என்று கருது கிறோம் என்று கூறி பதில் வந்தது. இதே நிலை தான் மாவட்டந் தோறும் ஏற்படுமென்று நான் கருதுகிறேன். ஆகையினால், மற்றும் பல்வேறு சங்கங்கள் கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்படுகின்றன என்று சொல்லுகிறபொழு தெல்லாம், அதற்காக ஆரம்பித்த சில ஸ்தாபனங்கள், வேண்டாத ஸ்தாபனங்கள், சர்வீஸ் சொசைடி என்று சொல்லுகிறார்களே, அதை ஆரம்பிக்கும் பொழுது, வட்டாரத்திற்கு ஒன்று என்று ஆரம்பித்த பொழுது அமைச்சரிடத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் பேசுகிறபொழுது சொன்னேன், உருப்படாது என்று இப்பொழுதும் சொல்கிறேன் அது உருப்படாது.

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: மத்திய சர்க்காரிடம் சொல்ல வேண்டும். வட்டாரத்திற்கு ஒரு இஞ்ஜினியரிங் சொசைடி என்பது மத்திய சர்க்கார் திட்டம். அதை நிறைவேற்றி வைக்கிறோம். அது உருப்படாது என்று சொல்லுவது மத்திய சர்க்காரைப் பீடிக்கும், நம்மைப் பீடிக்காது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இந்தச் சங்கம் அமைக்கிறபொழுது கூட நாங்கள் மாநிலங்கள் தோறும் இருக்கக்கூடிய கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் எல்லோரும் சேர்ந்து மத்திய சர்க்கார் அதிகாரியோடு கலந்து பேசி, அந்தத் திட்டத்தின்படிதான் செய்கிறோம் என்று அமைச்சர்அவர்கள் சொன்னுர்கள். ஒவ்வொரு இடத்திலும் நீங்கள் இந்த மாதிரி 'நாமிநேஷன்' செய்ய வேண்டும், பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. இங்கே கையாளப்பட்ட முறையையே கையாள வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நான் முன்னுல் சொன்னது போல, இந்த ஸ்தாபனத்தை அமைக்கும் பொழுது தங்களுக்குச் சாதகமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதையெல்லாம் பரிசீலனை செய்ய சந்தானம் கமிட்டி என்று நியமித்தார்கள். அது போல கூட்டுறவுத் துறையில் பதிவாளராக, ரிஜிஸ்ட்ராராக இருந்த பல பெரியவர்கள் இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிறுர்கள். முதலமைச்சர், அவர்களில் சிலரை நியமித்து, செய்யப்பட்ட விதிகள் நியாயமானவைதானு, பொருத்தமுடையவைதானு, ஜனநாயகத்துக்கு உகந்தவையா என்ற கருத்துக்களைக் கேட்கட்டும். நம் கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்தில் இதைப்பற்றிப் பல சந்தர்ப்பங்களில், இந்தக் கூட்டுறவுத் துறை ஜனநாயக முறையில், மக்கள் இயக்கமாக, பிரதிநிதித்துவம் உள்ள இயக்கமாக மலர ஆவன செய்ய வேண்டுமென்ற கருத்துடன் ஆவலாகப் பேசிப் பார்த்தேன். அவர்களுக்குக் கூட்டுறவுத் துறையில் நம்பிக்கை இல்லையோ என்ற கருத்துக் கூட ஏற்படுகிறது. அல்லது அதன் மீது நல்ல அபிப்பிராயம் இல்லையோ, எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறை என்னுகுமோ என்று எண்ணுகிறேன். தைரியமாகச் சொல்லுவேன். சொல்ல எனக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்று கருதவில்லை. அத்துறையின் மீது இருக்கும் அபிமானத்தைக் கொண்டு சொல்லுகிறேன். அந்தத் துறையை நிர்வகிக்க, முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவு செய்வது பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும். மிகுந்த ஆழ்ந்த சிரத்தையோடு யோசிக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். இந்த மன்றத்திலும் இந்த விதிகள் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : 'சேலஞ்ச்' செய்யக் கூடாது. ஒருவர் நிர்வகிக்கிற இலாகாவைப் பற்றி 'சேலஞ்ச்' பண்ணக் கூடாது. முதலமைச்சர் மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறீர்களா ?

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையிலுள்ள கடன் சம்பந்தமாகச் சில சொல்கிறேன். கடன் நிவாரணச் சட்டங்களும், விவசாயிகளுக்குக் கடன் நிவாரணத்திற்காக 1938-ல் இருந்தச் சட்டத்துக்குத் திருத்தங்களும் வந்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டுறவுத் துறையிலும், அரசாங்கத்திலும் பட்ட கடன் சம்பந்தமாக விவசாயிகள் நிலைமையைப்பற்றிக் கூறிக்கொள்ளுவது மிகவும் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். சமீப காலத்தில் ஏற்பட்ட விவசாயிகள் போராட்டத்தில் இதுபற்றி அரசுக்குப் போதிய விவரங்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். தொடர்ந்து விவசாயிகளுக்குக் கஷ்டங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் பல்வேறு பாகங்களில் இருக்கின்றன. எல்லா இடங்களிலும், பொதுவாக, சரியாக மழை பெய்து, சுபிட்சமாக விளைந்து, கடன்களைத் திருப்பும் நிலையில் விவசாயிகள் உள்ளார்கள் என்று சொல்ல முடியாது என்று அரசாங்கத்திற்குத் தெரியும். கூட்டுறவுத் துறை யானாலும், அரசுத் துறைகளாக இருந்தாலும், கொடுத்த கடனுக்கு நிவாரணம் அளிக்கும் முயற்சியைச் செய்ய வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் கடன் பெருகியிருக்கிறது. அந்த அளவுக்கு நிவாரணம் அளிப்பது, தள்ளுபடி செய்வது கஷ்டமென்று தெரியும். அது மட்டுமல்ல, வேறு கஷ்டமும் இருக்கிறது. நான் சொல்ல முடியும். ஸ்ரீவில்லிபுத்தூர் நிலவள வங்கி, மாநில வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூ. 87,79,000. மெம்பர்களிடமிருந்து வர வேண்டிய தொகை ரூ. 88,36,000. 1—8—1972-ல் மொத்த டிமாண்ட் ரூ. 6,10,000. 1—11—1972-ல் 7,05,000 என்று டிமாண்ட் வருகிறது. ஏற்கெனவே தவணை கடந்த பாக்கியுள்ளவர்களுக்கு இந்த டிமாண்டுகளில் முறையே ரூ. 2,80,000 ரூ. 3,05,000 செலுத்த வேண்டியிருக்கிறது. இப்பொழுது, அந்த வங்கியில் ஜூன் மாதம் 30-ம் தேதி வரை கடன் ரூ. 4,15,000. இப்பொழுது தவணை கடந்திருக்கிறது. ஆக மொத்தம் இந்த ஆண்டில் நவம்பர் வரை ஸ்ரீவில்லிபுத்தூரில் இப்பொழுது வறட்சி ஏற்பட்டுள்ள பகுதியில் மட்டும் ரூ. 9,33,000-ம் தாலுகாவில் மொத்தமாக 19 அல்லது 20 லட்சம் ரூபாய் வரை தவணை நிலுவையாகி வசூலாக வேண்டியிருக்கிறது. அதைப்பற்றியப் புள்ளி விவரங்களையெல்லாம் நம் முதலமைச்சரின் பரிசீலனைக்குக் கொடுக்க இருக்கிறேன். இந்த உண்மையைப் பார்க்கிறபொழுது, நான் சொல்லுவது ஸ்ரீவில்லிபுத்தூரில் 7 ரெவின்யு பிர்க்காக்களில் 2½ பிர்க்காக்களில் இந்தக் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. இன்று

மட்டுமல்ல. 1969-லிருந்தே இதைச் சொல்லி வந்திருக்கிறேன். அதற்கான விவரங்களையெல்லாம் அதில் நான் கொடுத்திருக்கிறேன். 1968-ஆம் ஆண்டில் ஒரு மெம்பர் தான் தவணை கடந்தார் 1—11—1971-ல் 1,226 பேர்கள் தவணை கடந்த தவணை கடந்த கடன். அந்தத் தாலுகாவில் ஒவ்வொராண்டும் ஜூன் மாதத்தில், இந்தக் கடன் மட்டுமல்ல, கூட்டுறவுக் கடன் சங்கத்திலும் கூட ஸ்ரீவில்லிபுத்தூரில் பாக்கி இருந்ததில்லை. இது பல வருஷங்களாகக் கண்ட உண்மை. இதே வங்கி பல்லாண்டுகளாக மாநில நிலவள வங்கி ஷீல்டையும், பரிசுச் சான்றிதழ்களையும் பெற்று வந்திருக்கின்றது. பட்டயம் மாதிரிக் கொடுக்கிறார்கள். அதையெல்லாம் பெற்று வந்திருக்கிறது. இம்மாதிரி நிலை ஏற்படக் காரணம் என்ன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து, 1958 லிருந்து மழையின்மையால் அங்கே கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம் மாநிலக் கூட்டுறவு யூனியனுடைய கூட்டுறவு இதழில், 1970-71-ல் நமது மாநிலத்தில் நிலவள வங்கிகள் மொத்தம் 1,907 லட்சம் கடன் வழங்கியுள்ளது எனப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவுக்கு ரூ. 122 லட்சம். இதில் கிணறு தோண்ட ரூ. 68 லட்சம். இது 56 சதவிகிதம் மொத்த கடன் விகிதத்தில். கிணறு ஆழப்படுத்த ரூ. 16 லட்சம். இது 16 சதவிகிதம். ஸ்ரீவில்லிபுத்தூரில், நான் சொல்லுகிற 2½ பிர்க்காவைத் தனியாக எடுத்துப் பார்த்தால், 1970-71-ல் வழங்கிய மொத்தக் கடனில் கிணறு ஆழப்படுத்த, புதுக்கிணறு வெட்ட, 84 சதவிகிதம் வழங்கியிருக்கிறார்கள். மழை பெய்யாது கஷ்டப்படும் இந்தப் பகுதியில் அவ்வளவு கடன் வாங்கிய காரணத்தால் விளைச்சலின்றி இப்படிக் கடன் சுமை பெருகியிருக்கிறது. இதிலுள்ள விவரங்களைப் பரிசிலனை செய்து பார்க்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் பிர்க்காவில் 30—6—1972 வரை தவணை கடந்த கடன் ரூ. 49,000; மல்லியில் ரூ. 1,59,000; சோழபுரத்தில் ரூ. 1,39,000; நந்தம்பட்டியில் ரூ. 30,000; சேத்தூரில் ரூ. 19,000; இராஜபாளையத்தில் ரூ. 14,000; வத்திராயிருப்பில் ரூ. 13,000; ஆக தாலுகா முழுவதிலும் உள்ள தவணை கடந்த கடன்கள் ரூ. 4 லட்சத்து 15 ஆயிரத்தில், வறட்சி ஏற்பட்டுள்ள ரூ. 3½ லட்சமாகத் தவணை கடந்திருக்கிறது.

இந்தப் பகுதியைப்பற்றி மட்டும்தான் கடன் தவணைகள் பின் வருஷங்களுக்குத் தள்ளிப்போடப்பட வேண்டுமென்று நான் பட்ஜெட் விவாத சந்தர்ப்பத்திலே சொன்னேன். நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே கூட எங்கள் பக்கம் என்ன பிரச்சாரம் செய்தார்கள்? ஒரு தேவர் மத்திய நில வள வங்கிக்குத் தலைவராக வந்திருக்கிறார்கள். அதைப் பொறுக்காமல் வேண்டுமென்றே இந்தக்

கடன் நிவாரணம் கேட்கிறார்கள் என்றெல்லாம் வசூல் காலத்திலே கூட கிராமங்களில் பிரசாரம் கட்டிவிடப்பட்டது. நான் அந்த பாங்கிலே பல வருஷங்கள் டைரக்டராக இருந்திருக்கிறேன். பிரிசிடெண்டாக இருந்ததில்லை. ஒரு நாயுடுக்கும் இன்னொருவருக்கும் போட்டி வருகிற போது ஒரு இராமச்சந்திர பிள்ளையை பிரெசிடெண்டாக இருக்க வேண்டுமென்று பிரேரணை செய்தவன் நான். அந்தப் பகுதியிலே இந்தப் பிரச்னை எப்படி வந்தது? விவசாயிகள் போராட்ட காலத்திலேகூட இதே காரணத்தையே சொன்னார்கள். இந்த விவரங்களைப் பொதுக்கூட்டத்தில் சொல்லக்கூடாது என்று சில பேர்களைக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு சொன்னேன். 30—6—1972-ல் தவணை கடந்த 432 கடன்களில் சம்பளத்து நாயக்கர், தொட்டிய நாயக்கர், அந்த நாயக்கர், இந்த நாயக்கர், கம்மவார் நாய்க்கர் எல்லாம் சேர்த்து 190 கடன். அதையும் கணக்கு எடுத்துப்பார்த்தேன், தேவர்கள் மட்டும் 90 கடன்கள். உள்ள உண்மை என்னவென்று பாருங்கள். அவர்களிடத்திலே அப்பாவி விவசாயிகளிடத்திலே போய் இந்தப் பிரிவினையைச் சொல்லி ஒரு வகுப்பு துவேஷ ஏற்பாடெல்லாம் செய்தார்கள். ஆகையினாலே இந்தக் கடன்கள் சம்பந்தமாக நான் கொடுத்திருக்கக்கூடிய இந்தப் புள்ளிவிவரங்கள் உண்மையா என்பதைச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தக் கடன்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான முயற்சியை எடுத்துக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கிணறு வெட்டுவதற்கு வாங்கிய கடனில் பலனளிக்காத கடன்கள் சம்பந்தமாக ரிசர்வ் பாங்கியோடு தொடர்பு கொள்வதாக அவர்கள் சொன்னார்கள். ரெவின்யு போர்டிலே இருக்கிற உறுப்பினர்கள் அங்கே வரப் போகிறார்கள். முன்போல ஜீப்புகளிலே வேகமாக 10, 15 ஜீப்புகளிலே ஒருவட்டம் சுற்றி வந்துவிட்டால் போதாது. ஸ்ரீவில்லிபுத்தூர் சம்பந்தப்பட்டமட்டிலே ஒரு நாள் மட்டும் இருந்தால் போதும் விவரங்கள் எல்லாம் நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும். இரண்டொரு கிராமங்களுக்கு, நினைத்த கிராமங்களுக்கு அந்தப் பகுதியிலே போகட்டும். அவர்களுடைய கிணறுகளைப் பார்க்கட்டும். நன்றாக அவர்களைத் தெரிந்து கொள்ள முடியும் இரண்டொரு குடும்பத்தினரைப் பார்க்கட்டும். அவர்கள் நிலவரத்தையும் பார்க்கட்டும். அம்மாதிரி நிலைமைகளை அவர்கள் தெரிந்து கொண்டு, புரிந்துகொள்ளும்படியான ஏற்பாடுகளைச் செய்து, சரியான நிவாரணம் அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இவைகளைப் பின் வருஷத்தில் ஒத்திப்போடுவதற்கான, சரியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நில அடமான பாங்க் சம்பந்தமான இந்தக் கடன்கள் மிகமிக அதிகமாக அங்கே இருந்துகொண்டிருக்கின்றன. ஒருவரே 60, 64, 68 வருஷங்களில் வாங்கிய கடன்களுக்கு 1968-ம் வருஷம் வரையிலும் சரியாக, தவணைப்படி தொகை செலுத்தி, தவணை கடந்த கடனாளியாக இல்லாமல் இருக்கிறார்.

அந்தக் கடன்களுக்கு, 1963-லே இருந்து தொடர்ந்து இது வரை அவரால் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எல்லா பாக்கிகளும் இப்படித்தான். இவைகளைப் பரிசீலனை செய்து பார்த்து, எப்படி அவர்களுக்கு இந்தக் கடன்கள் அதிகமாகிவிட்டன என்று கண்டறிய வேண்டும். முதலமைச்சர் அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் 'உங்களுடைய இராமச்சந்திரபுரம் கூட்டுறவு விவசாய பாங்கி இந்த வருஷத்திலே நல்லபடியாக நூற்றுக்கு நூறு கடனைச் செலுத்தி விட்டது' என்று சொன்னார்கள். நானும் 'மிகவும் சந்தோஷம்' என்று சொன்னேன். மத்திய பாங்கியினுடைய கடன் தீர்ந்துவிட்டது. ஆனால் அவர்கள் சங்கத்திற்கு உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய ரூபாய் 1,45,144 கடன் ஜூன் 30-ம் தேதியிலே பாக்கி. சங்கத்திலேயிருந்து மத்திய வங்கிக்குத் தவணை கடந்த பாக்கியில்லையேதவிர, உறுப்பினர்கள் கொடுக்கவேண்டிய கடன்கள் 1½ லட்சம் தவணை கடந்து இருக்கிறது. 22 கிராமங்கள் அந்த விவசாய பாங்கியிடமிருந்து கடன் வாங்கியிருக்கின்றன. அந்தக் கிராமங்களில், இந்த பாக்கியெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றது. இன்னொன்றுகூட அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : திரு பக்கர், கன்னிப் பேச்சு.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன குறை நீக்கப்படவேண்டுமென்று சொன்னார்களோ அதை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து, அதாவது வறட்சிக் காலத்திலே அவர்கள் கடன்களைத் திரும்பக் கொடுக்க முடியாமல் போனால், அதற்கு நிவாரணம் வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி வறட்சிக் காலத்தில் கடன் திரும்பக் கொடுக்கமுடியாதவர்களுக்கு உதவி செய்வதற்காக மாநில நில்வள வங்கியில் 10 லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறது. அதைப் போல கிணறுகளை வெட்டி அந்தக் கிணறுகளில் தண்ணீர் வாராமல் போனால், அவர்களுக்கு உதவி செய்ய ரூ. 7,50,000 சரியாக ஒதுக்கியிருக்கிறது. இதற்கெல்லாம் அரசு உதவியும் கொடுக்கின்றது. இது எல்லாம் ஏற்பாடாகி, முடிந்து பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ போராட்டத்திற்குப் போய்விட்டார்கள் போலிருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு இது தெரியாமல் இருப்பதற்கு வேறு காரணம் என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : அதற்கு எந்தப் பணம் ஒதுக்கியிருந்தாலும், எந்த வகையிலே அந்தப் பணம் வந்தாலும் கசப்பில்லை. எந்த வகையிலும், குருடனுக்குக் கண்தான் தெரியவேண்டும். அவர்களுக்கு நிவர்த்தி

எந்த வகையிலே அளிக்கப்பட்டாலும் சரி. அரசாங்கத்திலேயிருந்து ஜப்தி பண்ணக்கூடாதென்று இருக்கிறது. அந்த டெபுடி ரெஜிஸ்டிரார், அங்கே இருக்கக்கூடிய சப் ரெஜிஸ்டிரார்களுக்கு "உம்முடைய வேலை சரியாக இல்லை, உங்களுடைய வசூல் முறைகள் சரியாக இல்லை, உங்களிடத்திலே அதற்கான காரணம் ஏன் என்று காரணம் கேட்க முடியும்" என்று கடிதம் வருகிறது. அவர்களுக்கு பயப்படுகிறார்கள். ஆர்டர்ஸ் போடுவது நாங்கள் அல்ல. அங்கே இருக்கக்கூடிய சி. எஸ். ஆர். தான் இந்தக் காரியங்களைச் செய்துகொண்டு போகிறார்கள். அது பல இடங்களில் இருப்பதாக நான் அரசின் மீது குறை சொல்ல முன்வரவில்லை. ஜப்தி செய்வதாகக் கெடுபிடிகள் இருக்கிறதே தவிர, பல இடங்களில் நடப்பதாக நானும் கூறிக்கொள்ள முன்வரவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுவிட்டது என்று சொல்லுகிறேன். மாநில நில வள வங்கியின் கையில் இருக்கிறது. அரசு தானாக ரூ. 4 லட்சத்தி சொச்சம் கொடுத்திருக்கிறது. அவர்கள் கையில் இருக்கிறது என்றால், நீங்கள் கேட்டீர்களா? கேட்காமல் இருந்துவிட்டு உதவி செய்யவில்லையென்று மேலவையில் சொன்னால், வேறு எங்கேயோ போய்விட்டீர்கள் என்பதைத் தவிர வேறு என்ன சொல்லுவது?

*** திரு. காட்டூர் கோபால்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறபோது தேவர், நாயக்கர் என்று குறிப்பிட்டது ஜாதிச் சிக்கல்களைக் கிளப்புவதாகும். இப்படிப்பட்ட விஷயங்களைக் குறிப்பிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: அவர் குற்றம் சொல்லவில்லை. எல்லா ஜாதிகளையும் பற்றிச் சொன்னார்கள்.

*** திரு. எம். எம். பக்கர்:** கனம் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு என்ற காரணத்தால் எனக்குச் சில நிமிடங்கள் அதிகமாகத் தர வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: கன்னிப் பேச்சு பொதுவாகக் குறைவாகப் பேசுவது தான்.

திரு. எம். எம். பக்கர்: நான் இந்த சபைக்குப் புதியவன். இருந்தாலும் தாங்கள் எனக்குப் புதியவர் அல்ல. இந்த மன்றத்திலே உள்ள பலர் எனக்குப் புதியவர்கள் அல்ல. இந்த மன்றத்திலே உள்ள பலர் எனக்கு நீண்ட காலமாக நெருங்கிய நண்பர்கள். மற்றும் பலர் எனக்கு அறிமுகமானவர்கள். இன்னும்

சிலரோடு எனக்கு நெருங்கிப் பழகுகிற வாய்ப்பு இதுவரையில் கிட்டவில்லையானாலும், நாளடைவில் அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறுவேன் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்தியத் திருநாட்டிலே தமிழகச் சட்டமன்றங்கள் அமைதிக்கும் பண்பாட்டிற்கும் தரமான விவாதத்திற்கும் பெயர் பெற்றவை. அந்த மன்றங்களில் ஒன்றான இதிலே பல பெரியவர்கள் உறுப்பினர்களாக இருந்து இந்த மன்றத்திற்குப் பெரும் பெருமையைச் சேர்த்திருக்கிறார்கள். அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இதனுடைய உறுப்பினராக இருந்திருக்கிறார். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இருந்திருக்கிறார். அறிவுக் கடல் டாக்டர் ஏ. எல். முதலியார் இதனுடைய உறுப்பினராக இருந்திருக்கிறார். தேசத்தியாகி பிரகாசம் போன்ற மற்ற பெரியவர்களும் இதனுடைய உறுப்பினர்களாக இருந்து தங்களது அறிவாற்றலாலும் அனுபவத்தாலும் இந்தச் சபைக்குப் பெரிய பெருமையைக் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றனர். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த மன்றத்தில் நானும் ஒரு அங்கத்தினராக ஆனதற்கு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அதே சமயத்திலே இந்தப் பெரியவர்களைப் போல பெரும் புகழையோ பெருமையையோ இந்த மன்றத்திற்குச் சாதாரணமான என்னால் சேர்க்க முடியாது என்றாலும் கூட, இந்த மன்றத்தின் பெருமைக்குக் குந்தகம் வரக்கூடிய நிலையிலே என்றுமே நடந்துகொள்ளமாட்டேன் என்று மட்டும் உறுதி கூறிக்கொள்ளுகிறேன். அது மட்டுமல்லாமல் நான் இந்த மன்றத்திற்குப் புதியவன் மட்டுமல்ல, ஒரு சிறுபான்மை சமூகத்தில் இருந்து வந்தவன். ஆகையால் உங்களுடைய அனுதாபத்திற்கு உரிமை உள்ளவன் என்று கூட நான் இப்போது சொல்லிக்கொள்ளுவேன்.

அடுத்து, முதலமைச்சர் அவர்கள் சபை முன் வைத்துள்ள துணை மானியம்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் விழைகின்றேன். இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் அனைத்துமே ஏழைகளுடைய நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டு, கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிற பொழுது, அதை ஆதரிப்பதில் நான் முதலில் பெருமைப்படுகிறேன். பொதுவாகவே இந்த அரசு ஏழைகளுக்கு நிறைய சாதித்திருக்கிறது என்பதை யாருமே மறுக்க முடியாது. நான் இப்போது வரும்பொழுது கூட ஒரு நண்பர் என்னோடு வாதம் செய்துகொண்டு வந்தார். அவர் சொன்னார், சர்க்கார் தலைமைச் செயலகத்தில் ஏராளமான பேர் கூடுகிறார்களே, முன்பெல்லாம் இப்படி இல்லையே, ஏராளமான பேர் கூட்டம் போடுகிறார்களே என்று குறிப்பிட்டுச் சொன்னார். நான் அவரிடத்தில் சொன்னேன். மக்கள் தலைமைச் செயலகத்தில் கூட்டமாகச் சேருவதற்கு ஒரு காரணம் உண்டு. ஒரு காலம் இருந்தது. கிராமங்களிலே கஷ்ட நஷ்டங்களுக்கிடையே அவதிப்பட்டுக்கொண்டிருந்த

மக்கள் அங்குள்ள தாசில்தாரைக்கூட பார்த்து தங்களது குறை நிறைகளை எடுத்துச் சொல்ல முடியாத ஒரு காலம் இருந்தது. ஆனால் இந்த அரசு இன்று அவர்களுக்கு அளித்திருக்கும் ஆதரவால் தாசில்தாரிடம் மட்டுமல்ல, தங்களுக்குக் குறை நிறை இருந்தால் அமைச்சர்களிடம் போய்ச் சொல்லி குறை நிறைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஏழை மக்களுக்கு இருப்பதால், அவர்கள் கூட்டம் இங்கு இருப்பதாக அவரிடம் எடுத்துக் காட்டினேன். அந்த அளவுக்கு இந்த அரசு ஏழைகளுக்கு நன்மை செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று நான் நம்புகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் முதலாவதாக மாவட்ட திட்டக் குழுக்கள் அமைப்பதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 2,83,400 அதில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மாநிலத் திட்டக் குழு ஒன்றை அமைத்து இந்தியாவுக்கே வழி காட்டியாக இருந்தது தமிழ்நாடு, தமிழகம் தான். அதைப் போல மாநிலத் திட்டக் குழு மட்டுமல்ல, மாவட்டத் திட்டக் குழுக்களையும் அமைத்து, கீழ்மட்டத்திலிருந்தே திட்டங்கள் போடப்பட்டால் தான், மக்களுடைய, அதுவும் தாழ்த்தப்பட்டு வீழ்ந்து கிடக்கின்ற மக்களுடைய, குறைபாடுகள் நீங்கும் என்ற அளவிலே சர்க்கார் ஆலோசித்துள்ள முறை மிகவும் மகத்தானது என்று நான் நினைக்கிறேன். பொதுவாகவே எனக்கு முன்னால் பேசிய மதிப்புக்குரிய திரு. தங்கபாண்டியன் சொன்னது போல், பெரிய பட்டினங்கள் மாத்திரம் கொண்ட நாடல்ல இது. உண்மையான இந்தியநாடு, உண்மையான தமிழ்நாடு கிராமங்களில் தான் இருக்கிறதே தவிர, பட்டினங்களில் அல்ல. இதை நாம் மாத்திரம் சொல்லவில்லை. இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள் இந்த நாட்டினுடைய நல்வாழ்வுக்குப் போராடிய அத்துணை தலைவர்களும் இதைத்தான் சொன்னார்கள். மகாத்மா காந்தி கூட சுதந்திர போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்த காலத்தில், "நான் போராடுவது உண்ண உணவு இன்றி உடுக்க உடையின்றி கிராமங்களில் அவதிப்பட்டு பஞ்சைகளாக இருக்கும் தரித்திர நாராயணர்களுக்காக, அவர்கள் வாழ்வுக்காக சுதந்திரம்" என்று கூறினார்கள். இந்திய நாட்டினுடைய முதலாவது பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய "டிஸ்கவரி ஆப் இன்டியா" என்ற நூலில் ஒன்றைச் சொல்லுகிறார். "சுதந்திரப் போராட்ட காலத்தில் கீழ் உத்தரப் பிரதேசத்தில் நான் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, மக்களுடைய அவல வாழ்வைக் கண்டேன். அப்படிக் காணுகிறபோது, எனக்கு ஒன்று தோன்றியது. நாட்டின் சுதந்திரம் வந்தால், என்னுடைய கனவு வளர்ந்து 'சேன்ஞ் தி பேஸ் ஆப் இன்டியா' என்று நாட்டின் உருவமே மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று கனவு கண்டு முடிவு எடுத்தேன். ஆகவே அந்த மக்களுக்கு வாழ்க்கை தரப்பட வேண்டும்" என்றுதான் பண்டித நேரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்று சொன்னது இதை உத்தேசித்துத் தான். ஆகையால் கொஞ்சம் கொஞ்சமாக ஏழைகள், கிராமங்களில் விழ்ந்து கிடந்த மக்களின் கையைத் தூக்கிவிட்டு அவர்கள் தாங்களும் மனிதர்கள் தான், தாங்களும் சமத்துவமிக்கவர்கள் தான் என்று ஜனநாயக முறையில் வாழ்வதற்காக இந்த அரசு தன்னால் முடிந்ததை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செய்து வருகிறது என்பதைக் காண்கின்றபோது, நம் எல்லோருக்குமே மகிழ்ச்சியில் உள்ளம் பூரிக்கிறது.

அந்த முறையிலே மாவட்ட ரீதியில் சிறப்பான திட்டத்தை அமைத்துத் தந்த இந்த அரசை நான் வரவேற்கிறேன். மாவட்டங்கள் என்ற தலைப்பில் மற்றொரு மானியமாக ரூ. 80,11,000 முதலமைச்சர் கேட்டிருக்கிறார்கள். மாவட்டங்களில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்த அனுமதி கேட்டிருக்கிறார்கள். இந்தக் கண் சிகிச்சைக்கு முன்னதாக, சென்ற ஆண்டிலே, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி ஒன்றை ஆரம்பித்து இந்த நாட்டையே பரபரப்பிலே ஆழ்த்திய முதலமைச்சர், இந்த ஆண்டு கண்ணொளி வழங்க என்று ஒரு திட்டத்தை ஆரம்பித்து மற்றொரு பரபரப்பை இந்தியா முழுவதும் உண்டாக்கினார்கள். நான் கூட முதலமைசர் அவர்கள் எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வருகிறார். அதிலே இதுவும் ஒரு திட்டம் என்று முதலில் நினைத்தேன். இதுவும் தேவையான திட்டம் என்று மட்டும் தான் நினைத்தேன். ஆனால் ஒரு சம்பவத்தைக் காணக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்தச் சம்பவம் என்னுடைய நெஞ்சை உருக்கியது. திருவாரூரிலே முதன் முதலாக இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தை முதல்மைச்சர் ஆரம்பித்து வைக்கின்றபோது நான் அங்கே இருந்தேன். ஒரு பதினைந்து வயதுப் பையன்—அவனுக்குப் பிறவியிலிருந்தே கண் தெரியாது. அவனுக்கு அங்குள்ள கண் டாக்டர்கள் ஆபரேஷன் செய்து கண்ணாடி வழங்குவதற்காக அவரை எதிர் பார்த்துக்கொண்டிருதார்கள். முதலமைச்சர் அவர்கள் அங்கே வந்தார்கள். அந்தப் பையன் அங்கே படுத்துக்கொண்டிருந்தான். முதலமைசரவர்கள் அந்தக் கண்ணாடியை வாங்கி பையனுடைய கண்ணிலே மாட்டினார்கள். பதினைந்தாண்டுகளாக இருட்டையே பார்த்துப் பழக்கப்பட்ட அந்த பையன் முதன்முதலாக கண்ணொளி பெற்றான். அந்தக் கண்ணாடி வழியே உலகத்தைப் பார்த்து விட்டு அவன் சொன்னான், "எனக்குத் தெரியுதுங்க, எனக்குத் தெரியுதுங்க, எல்லாத் தெரியுதுங்க" என்று ஆனந்தக் கூத்தாடத் தொடங்கினான் அந்தப் பையன். அங்கே உள்ள அத்தனை பேர்களின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அதே போல், மற்றொரு அம்மையார்—70 வயது இருக்கும் —ஒரு கிழ மாது அவருக்கு பல ஆண்டுகளாகக் கண் தெரியவில்லை அவருக்கு, முதலமைச்சர் அவர்கள் கண்ணாடி வழங்கியபோது உலகத்தைப் பார்த்த அந்த

அம்மையார், "கருணாநிதியே, கலைஞரே, நீங்கள் தான் கடவுள்" என்று காலில் விழத் தொடங்கினர். அந்தக் காட்சியைப் பார்த்தபோது, எனக்கு ஒன்று தெரிந்தது. இந்த ஒரு சிறுவன் அல்ல, இந்த ஒரு மாது மட்டுமல்ல, ஆயிரக் கணக்கான பேர் தமிழகத்திலே கண்ணொளி பெற்று முதன் முதலாக உலகத்தைப் பார்ப்பதற்கு இந்த மகத்தான பணி துணை செய்யப் போகிறது என்று நினைக்கிறபோது, பெருமை அடைந்தேன். அத்தகைய இந்த முக்கிய மான கோரிக்கையை ஆதரிப்பதிலே நான் மீண்டும் பெருமைப்படுகிறேன்.

அடுத்து, கிராமச் சாலைகளைப்பற்றி. கிராமச் சாலைகள் பற்றி மதிப்புக் குரிய திரு. தங்கபாண்டியன் சொன்னார், 1,500 பேர்கள் இருக்கிற கிராமங் களுக்கெல்லாம் தார் சாலைகள் போட்டுக்கொடுப்பது என்பது துணை மானியக் கோரிக்கையிலே இருக்கிறது. அந்த 1,500 பேர்கள் இருக்கிற கிராமங்களுக்கு மட்டும் என்றிருப்பதை மாற்றி கிராமத்திலே இணைப்பு ரோடுகளை பெரிய சாலை களோடு இணைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுத்தப்படுமானால், இது மிகுந்த பலனை அளிப்பதாக இருக்கும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மற்றொரு விஷயம். சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தை இங்கே நான் சொல் வதற்காக தலைவரவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். சமீபத்திலே சுதந்திர நாள் கொண்டாடினோம். சுதந்திர நாள் கொண்டாடிய போது, சுதந்திர நாளன்று மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு 24 சதவிகிதம் பங்கு தரப்போவ தாக அன்று நள்ளிரவிலே அறிவித்தார்கள். நாமெல்லாம் கூட அதை மனதிலே வரவேற்றோம். அதனுடைய "ரியாக்ஷன்" இங்கே தெரியவில்லை. டெல்லியிலிருந்து மறுநாள் திரும்பிய சில நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த போது, அவர்கள் சொன்னார்கள், டெல்லி நாடாளுமன்றத்திலே, சென்டிரல் ஹாலிலே மறுநாள் இதைப் பற்றித் தான் அனைவரும் பேசினார்கள். இந்தியத் திருநாட்டிலேயே எந்த அரசாங்கமும் இதுவரை செய்யத் துணியாத ஒரு காரியத்தை, செய்ய நினைந்திராததொரு காரியத்தை, தமிழக முதலமைச்சர் செய்து விட்டாரே என்று ஒருவர் கூற, மற்றொருவர் சொன்னாராம். "அதற் கென்ன செய்வது! ஒரு டைனமிக் பெர்சனலிடி அங்கே முதலமைச்சராக இருக்கிறார், அவருடைய சொல், செயல், திறமை ஆகிய எல்லாவற்றிலும் முதன்மையாக நிற்கிறார். ஆகவே, எல்லாவற்றிலும் தமிழ் நாடு முந்தி நிற்கிறது" என்று. அதைச் சொன்ன நணபர் பெருமைப்பட்டார். எனக்கும் பெருமையாக இருந்தது, அதைக் கேட்பதற்கு. தமிழ் நாட்டின் முதலமைச்சர் இந்திய நாட்டிலேயே தலைசிறந்தவர் என்று இங்கே உள்ளவர்கள் அல்ல, அங்கே உள்ளவர்கள் பாராட்டுவதை நினைக்கிறபோது, பெருமையாக இருந்தது. அதே சமயத்தில், வேறொரு நினைப்பும் வந்தது. டெல்லியிலிருந்து வருகிற எல்லா

1972 ஆகஸ்ட் 22] [திரு. எம். எம். பக்கர்]

வற்றையும் அகில உலகக் கண்ணோட்டத்துடன் பார்க்கிற ஆங்கில வார ஏட்டிலே சில வாரங்களுக்கு முன்னால் ஒரு கட்டுரையைப் படித்தேன். அதிலே, டி.எம்.கே. ஒரு வலதுசாரிக் கட்சி என்று எழுதியிருந்தார்கள். அதை எழுதியிருந்தவர், எதையும் அகில உலகக் கண்ணோட்டத்துடன் பார்க்கிற பத்திரிக்கையாளர்—எந்தக் கட்சியையும் சார்ந்த பத்திரிக்கை அல்ல. எந்த அரசாங்கமும் நிறைவேற்ற முடியாத தொழிலாளர் திட்டத்தையெல்லாம் நிறைவேற்றுகின்ற அரசு இது என்று பார்க்கிறபோது, வலதுசாரி என்றால் என்ன அர்த்தம் என்றே எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை, தலைவரவர்களே, நான் நினைக்கிறேன், ஆளுங்கட்சியான தி.மு.க.-வினர் உங்கள் வலது பக்கத்திலே அமர்ந்திருக்கிற காரணத்தால், வலதுசாரி என்று அந்தப் பத்திரிகை அழைத்ததோ, என்னவோ என்று தோன்றுகிறது. ஆனால் ஒரு சந்தேகம். திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும், நான் கவலைப்பட மாட்டேன். பெயரல்ல முக்கியம். அப்படியே வலதுசாரி என்று ஒத்துக் கொண்டாலும், இங்கே உள்ளவர்கள்—இந்தப் பகுதியிலுள்ளவர்கள் இடதுசாரி கட்சிகளா? அப்படிச் சொல்கின்ற போது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஆறுமுகசாமி போன்றவர்கள் மகிழ்ச்சியோடு ஒத்துக்கொள்ளக் கூடும். ஆனால், திருவாளர்கள் தாமோதரன், சுவாமிநாதன் போன்றவர்கள் அதை ஒத்துக்கொள்வார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே, ஏன் இதை நான் சொல்ல வந்தேன் என்று சொன்னால், தலைவரவர்களே, இதிலே என்ன பெயரைச் சொல்லி யார் அழைத்தாலும் அதுவல்ல முக்கியம். இந்த நாட்டிலே தவித்துக்கொண்டிருக்கிற மக்களை யார் கைதூக்கி விடுகிறார்கள் என்று பார்ப்பது தான் முக்கியம். அந்த முறையிலே பார்க்கிறபோது, எந்த அரசும் செய்யாத ஒரு நல்ல காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த சர்க்காரும், அவருடைய தலைமையில் இருக்கின்ற இந்தச் சுறுசுறுப்பான அமைச்சரவையும் செய்துகொண்டு வருகின்றது. ஆகவே, அதைப் பாராட்டி, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். வணக்கம். (கை தட்டல்.)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, முதலிலே மானியக் கோரிக்கையின் மீது இன்றைக்கு பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமை கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே பல்வேறு மானியங்கள் வழங்கப்படுவதற்கான அனுமதியைக் கோரி இங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. வழங்கப்பட்ட நிதிகள் யாவும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை, வரவேற்கக் கூடியவை என்று முதற்கண் கூற விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் இரண்டாவது ஊதியக் குழுவின் முரண்பாட்டுக் குழு தந்த சிபாரிசுகளின் அடிப்படையில் சில அறிவிப்புகளை இங்கே வெளியிட்டார்கள், அந்த அறிவிப்புகளை வெளியிடக்

கூடிய நேரத்தில் முதல் இரண்டு ஊதியக் குழுவில் ஏற்பட்ட முரண்பாடுகள் தீர்க்கப்படவிருக்கின்றனவா என்று பார்க்கிறபோது, சில முயற்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன ; அவற்றையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சமுதாயத்தில் இருக்கக் கூடிய சூழ்நிலையில் இன்றைக்கு இந்த அரசு சோஷலிச அடிப்படையில் சென்று கொண்டிருக்கிறது என்று மத்தியிலுள்ள அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது என்று இன்றைக்கும் சொல்வேன். ஆனால் ஊதியக் குழுவைப் பொறுத்த வரையில் சென்ற ஊதியக் குழுவின் பரிந்துரைகள், மிகச் சரியில்லாத அடிப்படையில் அரசின் கொள்கைக்கு நேர்மாறாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவையில் எடுத்துக்காட்ட இருக்கின்றேன். ஐந்தரை லட்சம் ஊழியர்களில் கீழ் மட்டத்தில் இருக்கின்றவர்களுக்குக் குறைவாகவும் அதிகமான ஊதியம் பெறக்கூடியவர்களுக்கு அதிகமாகவும் சிபாரிசு செய்யப்பட்டிருப்பது சோஷலிசக் கொள்கைக்கு விரோதமான ஒன்றாகும். அநேக சங்கங்களின் சார்பிலும், இயக்கங்களின் சார்பிலும் கோரிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொடுத்தோம். அப்படிக் கொடுத்து பிற்பாடும் எத்தகைய நிலை என்று சொன்னால், அன்றைக்கு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மிக்க நம்பிக்கையோடு இருந்தார்கள். அன்றைய தினம் மே 22-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசுவதற்கு முன்பு இந்த முரண்பாடு குழுவினால் நன்மை ஒன்றும் ஏற்படாது என்று எண்ணியிருந்த சமுதாயம், முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது 'நீங்கள் கிளர்ச்சியை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள், இந்தக் குழுவால் உங்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும்' என்று உறுதியளித்தார்கள். பரிசீலனை நடக்கும் என்று நம்பி நாங்கள் ஆசிரியர் பெருமக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம், 'கிளர்ச்சியினை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று. மாண்புமிகு முதலமைச்சர், "பிறந்தது ஊமைப்பிள்ளை. அது என்றைக்காவது பேசும் என்று தாய் எதிர்பார்த்திருந்தாளாம். பின்பு ஒரு நாள் அந்தக் குழந்தை பேசிற்றும். அது பேசியபோது எப்படிப் பேசியது" என்பதையெல்லாம் சொல்லுவார்கள். அது போல ஆசிரியர்களுடைய சமுதாயம் மிக நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அலுவலகங்களில் உள்ள இளநிலை எழுத்தர்களைவிட இரண்டு ஆண்டுகாலம் அதிகமாகக் கல்வித் தகுதி பெற்றிருக்கின்றார்கள் என்று பல முறை எடுத்துச்சொல்லி, இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு 'இன்கிரிமெண்டுகள்' என்ற அடிப்படையில் ஊதியக் குழுவால் முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டு ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் சற்றுக் கூடுதலான சம்பளத்தைக் கொடுத்தார்கள். அப்போதும் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கும் மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் ரூ. 60-க்கு உயர்த்தப்பட்டுவிட்டது. சாதாரணமாக இப்படிப்பட்ட உயர்வினைக் கொடுக்கும்

போது, கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்குச் சற்று கூடுதலான உயர்வும் மேலே உள்ளவர்களுக்கு உயர்வு கொஞ்சம் நிதானமாகவும் இருக்கும். இப்படித்தான் அரசு செய்யும் என்று எதிர்பார்த்து நம்பியிருந்தோம். ஆனால் அறுபது ரூபாய் வித்தியாசம் என்பது இப்போது மேலும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் பார்க்கிறோம். செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டு கால கல்விக்காக இரண்டாண்டு கால ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தும்கூட எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு இளநிலை எழுத்தராக வருபவருக்கும் அதே ஊதியம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டு கால கல்வித் தகுதிக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த மதிப்பினை தனி நபர் கமிட்டியும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிய போது, 'அது ஏற்கெனவே உங்களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டது' என்று சொன்னார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி.-க்குப் பிறகு இரண்டாண்டு காலப் படிப்பிற்கும் பயிற்சிக்கும் இரண்டு இன்கிரிமெண்டு என்று சொன்னால், நான்காண்டு காலக் கல்விக்கு நான்கு இன்கிரிமெண்டு அல்லவா கொடுத்திருக்க வேண்டும்? ஆனால் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு விட்டது என்று ஒருவர் குழு சொல்லி விட்ட நிலையில் இப்போது மீண்டும் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களுடைய ஊதியம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று 97 ஆயிரம் ஆசிரியர்கள் கேட்கின்றார்கள். ஆனால் நியாயம் மறுக்கப்படுகிறது. எனக்கு நன்றாக நினைவிற்கு வருகிறது, 1966 ஆம் ஆண்டிலே இந்த நாட்டிலே காங்கிரஸ் அரசு இருந்தது. அப்போது ஆசிரியர்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று கோரிய நோக்கிலே, கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் சில சிபாரிசுகளைச் செய்தார்கள். அந்த நேரத்தில் பல்கலைக் கழக கிராண்டு கமிஷனின் சிபாரிசுகளை அமுல்படுத்தியபோது பி.ஏ. படித்தவர்களுக்குச் சற்று கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்ட போது அதற்குச் சில இடையூறுகள் ஏற்பட்டன. அன்றைக்கு 1967 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாளன்று சேலத்திலே நடைபெற்ற தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி மாநாட்டிலே கலந்து கொண்டு பேசிய போது, நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். 'இன்றைக்கு கல்லூரி ஆசிரியர்களுக்கு உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ள சம்பள விகிதங்களைப் பார்க்கும்போது, நான் அங்கேயே சென்று விடலாமா என்று எண்ணத் தோன்றுகிறது' என்றார்கள். மேலும் அந்த அளவிற்கு மேல்தட்டில் உள்ளவர்களுக்கு உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். உண்மையாகப் பார்க்கபோனால், ஆரம்ப ஆசிரியர்களுக்குத்தான் பிரச்சினைகள் அதிகம். அவர்களுக்குத் தான் வாழ்க்கையை அனுபவிப்பதில் தொல்லைகள் அதிகம். அவர்களுக்குத்தான் வசதிகளைக் கொடுக்க வேண்டும் என்று நியாயத்தின் அடிப்படையில் அன்றைக்குச் சொன்னார்கள். அன்றைய தினம்

அந்த மகாநாட்டில் பங்குகொள்ள வேண்டுமென்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்த நேரத்தில், 'நேரம் இல்லை' என்று சொல்லி விட்டார்கள். மாண்புமிகு திரு. நடராசன் அவர்களைக் கூப்பிட்ட நேரத்தில், எனக்குத் தொகுதிப் பணிகள் இருக்கின்றன' என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் பேராசிரியர் அவர்கள் திருச்செங்கோடு பாராளுமன்றத் தொகுதிக்கு அன்று நின்ற காரணத்தினால், எங்கள் அழைப்பினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு வந்து கலந்து கொண்டார்கள். ஆனால் மற்றவர்களோ பிற கட்சி யினரோ இன்றுள்ளதுபோல அன்றைக்கு தமிழ் நாடு தொடக்கப்பள்ளி ஆசிரி யர்களுடைய கூட்டணியினை மதித்தார்களா என்பதை அவர்களுக்கே விட்டு விடுகிறேன். இந்த அரசு அமைந்த பிறகு, ஆசிரியர் பெருமக்கள் பல்வேறு காரியங்களை எதிர்பார்த்தார்கள். 'இவர்களிடம் நியாயம் கிடைக்கும்' என்று உண்மையாக நம்பி ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள், ஆசிரியர் பெருமக்கள் தவறாக அழைத்துச் செல்லப்படுகின்றார்கள் என்று பொருள்படும்படி குறிப்பிட்டார்கள். அவர்கள் தவறாக அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்' என்ற வார்த்தைகளை அவர் சொல்லும்போது, அவர் எப்படித்தான் இந்த வார்த்தைகளை உபயோகித் தார்கள் என்று எனக்குப் புரியவில்லை. 'ஆசிரியர் சமுதாயத்திற்குச் சிந்திக்கத் தெரியாது, ஆசிரியர் சமுதாயத்திற்குத் தெளிவாக முடிவெடுக்கத் தெரியாது' என்று சொல்லுவதானது வேதனைக்குரியதாகும். இன்றைய தினம் அவர் ஆளும் கட்சியின் பக்கம் வந்துவிட்ட காரணத்தினால், இத்தகைய குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டியதில்லை என்று அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மே திங்கள் 22-ம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசும் நேரத்தில், 'எங்கள் காலத்தில்தான் நீங்கள் வளர்ந்திருக்கின்றீர்கள்' என்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்ளுகிறோம். வளர்ந்திருக்கிறோம். இந்த அரசின் காலத்தில்தான் எங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டு மென்று விரும்புகிறோம். இதில் சந்தேகமில்லை. ஆனால் இதற்கு முன்பு போராட்டமே நடைபெற வில்லையா என்றால், நடந்திருக்கின்றது. அதன் தன்மைகள் வேறாக இருக்கலாம். பத்தாண்டு காலத்திற்கு முன்பிருந்த நிலை வேறு, இன்றுள்ள நிலை வேறு. பத்தாண்டு காலத்திற்கு முன்பு சமுதாயத்தில் சோஷலிஸம் பேசுவது என்பது ஒரு பயங்கரமான செய்கையாகக் கருதப் பட்டது. அன்றையதினம் அரசியல் சட்டம் பற்றிப் பேசினால் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் சோஷலிசம் பற்றியும் அரசியல் சட்டங்கள் பற்றியும் பேசினால்தான், அரசியல் கட்சிகளுக்கு வாழ்வு என்ற அளவிற்கு நாட்டு மக்களிடையே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றே குறிப்பிடலாம். ஒரே நாளில், திடீரென்று ஒரு நாள் நள்ளிரவு டாடா கம்பெனியை 'நேஷனலைஸ்' பண்ணும்

1972 ஆகஸ்ட் 22] [திரு. செ. முத்துசாமி]

அளவிற்கு நாட்டின் முன்னேற்றம் வந்திருக்கிறது. தொழிலாளர்களுக்கு 24 சத விகிதம் போனஸ் கொடுக்கும் அளவிற்கு அரசின் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அடிப்படையில் ஆசிரியர்கள் சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு ஏதும வழஙகப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்.ஜி.ஓ.-க்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்—நாளைக்குப் பார்ப்பதற்கு வாருங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள்—தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் சற்று நியாயம் வழங்குங்கள், அவர்களுடைய ஊதியத்தினை மாற்றியமையுங்கள் என்று அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்குத் தனி நபர் குழுவின் பரிந்துரைகளில் இடம் அளிக்கும் வகையில் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஐந்து கோடி ரூபாய்க்குச் செலவாகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வளவு செலவினை அரசு ஏற்றுக்கொண்டும், ஆசிரியர் பெருமக்களில் ஒரு சிலரை இரண்டாம் தரமாகவும் வைத்திருப்பது நியாயம் தானு என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 'எழுத்தறிவித்தவன் இறைவனுவான்' என்று சொல்லுவார்கள். ஆனால் எழுத்தறிவிக்கும் ஆசிரியர் பெருமக்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆசிரியர்கள் போராட்டம் நடத்திவிட்டார்கள் என்பதற்காக ஆசிரியர்கள் பேரிலே ஏதாவது கோபம் இருக்கிறதோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. போராட்டம் நடத்தித்தான் திர் வேண்டுமென்ற கட்டாயத்தில் சில நேரத்தில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுகின்றன. அதுபற்றி இங்கே நான் விமரிசனம் செய்ய விரும்பவில்லை. ஆனல் இந்த நல்ல சூழ்நிலையில் முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன், ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயத்தில் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மீது நல்ல முடிவெடுக்க வேண்டும், இவர்கள் விஷயத்தை இன்னும் சற்று அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும். எனவே முதலமைச்சர் அவர்கள் தவருமல் இந்த சமுதாயத்திற்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் விஷயத்தில் இரண்டாவது ஊதியக் குழுவினுல் பரிந்துரைக்கப்பட்ட செலக்ஷன் கிரேடுகள் அரசினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2—10—1970 லிருந்தே அமுலாக்கப்படவேண்டும் என்று 1—1—1971-ல் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இது மட்டுமின்றி, ஆசிரியர்களை மாற்றும் மாற்றல் உத்திரவுகளுக்கு இணங்க டி.ஏ. கொடுக்கப்பட வேண்டுமென்றும் உத்திரவுகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனல் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலுள்ள ஆசிரியர்களுக்கு இது நாள் வரையில் இந்த உத்திரவுகள் அமுலாக்கப்படாமலேயே இருந்துவருகின்றன. உத்தரவுகள் வெளிவந்து கிட்டத்

தட்ட ஒன்றரை ஆண்டு காலமாகியும் இன்னும் அவை அமுலாக்கப்படாம லிருப்பது குறித்து வருந்துகிறேன். பல முறை அதிகாரிகளிடம் சொன்னேம். ஆனல் நிர்வாகத்திலுள்ள கோளாறுகள்தான் அதிகரித்துக் கொண்டிருக் கின்றனவே தவிர, அங்கே உள்ள சிவப்பு நாடா முறைப்போக்கை மாற்ற முடிய வில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே உள்ள இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். யூனியன் பஞ்சாயத்து நிர்வாகத்தி லுள்ளவர்கள் ஏதாவது காரணங்களைக் காண்பித்து, கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக் காலமாக இந்த நிலையை நீடித்துக்கொண்டு போகின்றார்கள். அவர் களுக்கு இந்த இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைகளுக்கொப்ப, அரசு ஆணைகளுக்கொப்ப, இன்னும் முறையாகச் சம்பளம் நிர்ணயிக்கப்படாமலிருக் கிறது, செலக்ஷன் கிரேடுகள் கொடுக்கப்படாமலிருக்கின்றன, டி.ஏ. கொடுக்கப் படாமலிருக்கின்றது. இது நியாயம்தானு என்று அரசு பரிசீலிக்க வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். தலைவரவர்களே, இது அவ்வளவும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். 7—1—1971-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டும் ஒன்றரை ஆண்டுகள் கழித்தும் அந்த உத்தரவுகள் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன. நிறைவேற்று வதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போது, அந்தத் தேதியிலிருந்து போடு கின்ருர்களே தவிர 7—1—1971 லிருந்து கொடுப்பதற்கான உத்தரவுகளைப் போடுவதில்லை. அரசு நிதி வழங்கி, உத்தரவு கொடுத்தும்கூட வழங்கப்படாத நிலைமை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அந்த மாதிரியான டிலேக்கு ஆளாகும் அளவுக்கு ஆசிரியர்கள் தாழ்த்தப்பட்டிருக்கிருர்கள். இப்படிப்பட்ட தடைகள் இடையிலே பல இருக்கின்றன. இந்தத் தடைகளை நீக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, செலக்ஷன் கிரேடு என்று சொல்கின்றபோது, அது ரூபாய் 195-லிருந்து ஆரம்பம். ஒரு ஹையர் கிரேட் ஆசிரியர் ரூ. 180 வாங்கி, அதற்கு மேல் செலக்ஷன் கிரேடுக்குப் போனல் ரூபாய் 195 தானே கிடைக்கும். செலக்ஷன் கிரேடு என்று சொன்னல், இரண்டு இன்கிரிமெண்டுகூட இருக்க வேண்டாமா? எப்.ஆர்-ல் இரண்டு இன்கிரிமெண்ட் என்று இருப்பது கூட கொடுக்கக் கூடாதா? இது ஆசிரியர்களுக்கு மட்டும் ஏற்படும் ஒரு நிலை. முதலமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, தக்கதொரு உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாகக் கல்வித் துறையில் அரசு உத்தரவு துரிதமாக வந்தாலும், நிர்வாகத்தில் இருப் பவர்கள் காட்டும் மெத்தனத்தால் பல இடர்ப்பாடுகள் இருந்து வருவதைக் களைய, அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு . . .

1972 ஆகஸ்ட் 22]

(மாண்புமிகு தலைவர் அவர்கள் மணி அடிக்க, பேச்சு முடித்துக்கொள்ளப் பட்டது).

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, என்னுடைய உரையில் உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களைக் குறிப்பிட்டுச் சொன்னதாகச் சொன்ஞர்கள். ஆசிரியர்கள் தவருக இழுத்துச் செல்லப்படுகிருர்கள் என்று சொன்னேனே தவிர, நான் அவரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் என்னுடைய பெயரை இழுத்துச் சொல்வது அவரையே குற்றச் சாட்டுக்கு ஆளாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, என்னைக் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்சமுதாயம் எழுச்சி பெற்றிருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்திலும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்திலும், நான் சம்பந்தப்பட்ட காரணத்தால் என்னைக் கூறினர் என்று கருதிச் சொன்னேன். எனக்கு அது சம்பந்தமில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்று சொல்வார்கள். அந்த இறைவனே போராட்டம் நடத்தினால், என்ன நிலைமையாகும் ?

திரு. செ. முத்துசாமி : அந்த இறைவனும் சாதாரண மனிதன்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆசிரியர் திரு. முத்துசாமி இறைவனும் சாதாரண மனிதனும் சமம் என்று சொல்கிருர். அதையே பள்ளிப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால், நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, எழுத்தறிவித்தவன் இறைவன் என்று குறிப்பிட்டபோது, ஆசிரியர்களைப் பற்றி எடுத்துக் கூறுகையில் அவர்களுடைய நிலைமையைக் காட்டத்தான் சொன்னேனே தவிர, பிள்ளைகளுக்கு அவ்வாறு போதிக்க மாட்டோம். ஆசிரியர்கள் தவருக எதையும் சொல்லிக் கொடுத்து விட மாட்டார்கள். பாடப் புத்தகத்தில் தவறுகள் இருந்தாலொழிய நாங்கள் எந்தத் தவறையும் மாணவர்களுக்குச் சொல்லித்தர மாட்டோம்.

* **Thiru A. R. DAMODARAN** : Sir, it gives me great pleasure to participate in this discussion on the Supplementary Estimates that has been placed before this House for its approval. Sir, I

should first like to invite the attention of the Hon. the Minister for Civil Supplies and Commercial Taxes, since there is a very important demand in this Supplementary Budget for the purchase of jeeps for the Sales Tax Officials of the Tamil Nadu Government. I do not know whether the term intelligence in the Intelligence Wing of the Commercial Taxes Department, is merely put as a qualification or whether that Wing really exercises intelligence in working the Sales Tax Act of our State. In Madras City, Sir,—and this was pointed out to me only a few days ago when we had a Conference of Petroleum Dealers,—there are—and I have this list with me which I shall hand it over to the Hon. Minister—approximately 10 shops selling petrol in the open market without having received any licence from the Sales Tax authorities, contravening the provisions of the Madras Sales of Motor Spirit Act, as well as Explosives Act and all this petrol is stolen petrol—petrol stolen from the oil installations or from the tank lorries which deliver this petrol to our pumps. In fact, I think, I should also invite the Hon. Minister's attention to the fact that much of the supplies that should have gone to the State Transport as well as the Railways are finding their way into the open market and is being sold in these unauthorised unlicensed shops. Sir, as a dealer we have to wait one year before we can get a licence from the Sales Tax Department, from the Explosives Department to sell petrol through licensed bunks. But here we have 10 shops in Madras City which are selling this petrol in the open market and recently two big fires were also reported in Madras City, which was due to the fact that petrol was being sold, not in the black market, but in the white market, because it is not sold at a higher price in the black market, but in the white market without any fear of consequences from the Sales Tax Administration. I would like the Hon. Minister to take up this matter and see that these unlicensed shops are not allowed. From the point of view of secrecy, I do not wish to mention the names of the shops but I have got here all the addresses and with your permission, Mr. Chairman, Sir, I would like to hand it over to the Hon. Minister for his confidential investigation. (A list was handed over by the Member to the Hon. Minister for Food and Revenue.) I hope, Sir, that corrective action will be taken because it is proving a very big nuisance for all of us not only in the trade but also for the consumers and it is leading to a lot of leakage in Sales Tax revenue.

The other thing I would like to comment upon is the significant payment of grant to the Madras and the Annamalai Universities relating to education. Sir, the Hon. the Minister for Education has mentioned so many matters, while he has addressed public gatherings in the State regarding reforms in the pattern of higher education. He has also mentioned—this is what I gathered from the newspaper, Sir,—about a new reform that he has in mind about the S.S.L.C. Examination that he proposes to conduct two levels of examination in the S.S.L.C. and many new ideas have been mentioned by him in public speeches. I can only state that as a Member of the Legislature, I am very sorry, very sorry indeed, that we should be kept in ignorance about such proposals and although I may prove repetitive on this occasion, I would again request him to revive the Consultative Councils, for which he seems to have such an anathema that he has not convened them at all for the past four years and to give us an opportunity to discuss these measures and to know the Government way of thinking, so that we may have an opportunity of judging the relative merits of such proposals. When he brings forward such an important reform as having two levels of examination at the S.S.L.C. Class, it pertains to over 200 thousand students, who are appearing every year for this public examination and many doubts have been expressed especially by boys who come from the rural areas, from the backward areas of our State, whether this would shut out the opportunities for further education for them. Therefore, I would make a plea with him, even if it is not possible for him to convene the Consultative Council of Legislators to discuss this matter, at least during the next session of the Legislature to publish a White Paper on these reforms, which he has in mind, so that we may have an adequate opportunity of discussing and thinking over these measures because as we all know, Sir, in a Joint Select Committee, which is appointed to consider an important Bill, various issues are hammered out and it is always possible to get a large measure of agreement over many controversial matters and it would indeed be helpful to the Government itself to push through the many reforms that they have in mind.

As a representative of the Graduates Constituency, I would be failing in my duty if I did not refer to the decision of the Hon. the Chief Minister while considering the One Man Commission Report which had recently been appointed by the Government to

consider the refixation of scales of pay. I was hoping very much, Sir, that we would be spared the necessity of having to discuss these measures again because we were hopeful that these Associations after they met the Hon. the Chief Minister and the Chief Secretary, would be able to hammer out an agreed solution and we would not have come to the unfortunate stage of some, of large sections of Government employees—be they teachers or the non-gazetted Government Officers—having to resort to public statements expressing some dissatisfaction with the recommendations that have been made by the One Man Commission. We are all aware, Sir, as responsible legislators, that the financial burden of improving the pay scales is considerable and in fact, the Hon. the Chief Minister has been undoubtedly very generous. As Thiru S. Muthuswamy mentioned, he seems to have been more generous than what the One Man Commission itself recommended, for which we are deeply thankful. I would only like to state Sir, that it is about time he should hammer out an acceptable solution so that agitations do not cause considerable dislocation not only to the public but also to Government administration itself. In fact, Sir, I know for the past three or four months, the Hon. the Chief Minister has been extremely busy dealing with various such agitations and if at all he has been able to announce a decision at this stage, it was because of his very firm resolve to see that a quietus was given and that at least a large section of Government employees would derive some satisfaction in knowing that their grievances are being redressed to the maximum possible extent. As far as the Graduate teachers are concerned, they seem to have expressed some dissatisfaction because they were expecting a 50 rupee increment. I do not know where from they got this figure. Some of them told me that this was the indication they received from very high quarters but I am not aware of what promises have been made, Sir. In fact they have worked out a scale of the salaries and according to the working out, which I have not verified, it seems to indicate that a Graduate teacher who has put in about seven or eight years of service, according to the revised scale that has been fixed, will get an increment of only Rs. 5 per month. I would only request him not to give the final decision in this regard but to again call the Associations concerned and to give them an opportunity to state what their real grievances are so that this unfortunate trend of starting direct action may be given a quietus and

we may be permitted some freedom in planning for other activities, which are so essential for the people. We have not yet seen the One Man Commission Report and we hope it will be placed before this House. I would only plead on this occasion that the whole matter need not be treated as closed and definitely I think it is our responsibility as Legislators also—I would like to make an appeal not only to the Teachers but also to my friends in this House—to see that this matter is amicably settled and we are not again placed in the unfortunate predicament of having to face any sort of large scale agitation, which may have very adverse effect on the educational structure of our State.

Thank you, Sir.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, துணை மான்யக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் வீடு கட்டும் வசதி நிறைய செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையாக இருந்தாலும்கூட, அது பிற்பட்ட வகுப்பினர் நலத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்களின் நிர்வாகத்தில் இருக்கிறது. வீடு கட்டும் வசதி என்ற முறையில் கூட்டுறவுத் துறையின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு கவனிக்கப் பட்டு வருகிறது. கடந்த ஜூலை 1-ம் தேதியிலிருந்து இந்தப் பணிகள் ஸ்தம் பித்துவிட்டன. திடீரென்று வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்த ஜாயின்ட் ரிஜிஸ்ட்ரார் நிர்வாகத்திலிருந்து அந்த வேலைகள் பூராவும் இப்பொழுது லோன் சாங்ஷன் செய்வது எல்லாம் அறவே நிறுத்தப்பட்டிருக்கிறது. அபெக்ஸ் சொசைட்டி, சென்னை மாநில வீட்டு அடமான பாங்குடன் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதற்காக நடவடிக்கை எடுத்து இணைந்தவுடன் இந்த வேலைகளை நிறுத்தியிருந்தால், நல்லதாக இருந் திருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, வீடுகள் கூட்டுறவுத் துறையில் கட்டப்படுவதைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல கூட்டுறவுச் சங்கங்கள் வீட்டு வசதிகள் செய்து கொண்டு வருகின்றன. தவணை முறையில் வீடு கட்டுவதற்காக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. 200 சங்கங்களுக்கு மேல் இந்த வீடு கட்டும் வேலை செய்துகொண்டு வருகிறது. எல்.ஐ.சி. ஒரு அபெக்ஸ் சொசைட்டி இருந் தால்தான் கடன் பணம் தருவோம் என்று சொல்லிவிட்டது. வீட்டு வசதி வாரியம் இருக்கிறது. தனிப்பட்ட முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் வீ[illegible] கட்டும் திட்டத்திற்காக இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நிதி வச[illegible] செய்து கொடுப்பதற்காகவே அபெக்ஸ் சொசைட்டி நிறுவ வேண்டியதாக

இருக்கிறது. இந்த வேலை முடிந்தவுடன் தமிழ்நாடு பூராவும் வேகமாக வீடு கட்டும் காட்சியைப் பார்க்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, ஆகவே வேலை ஸ்தம்பித்து விட்டது என்பது உண்மை. அவற்றையெல்லாம் இணைத்து அபெக்ஸ் சொசைட்டி உருவாக்கிய பிறகு, இந்த வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இனியாவது துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நில வள வங்கிகளில் கிணறு வெட்டுவதற்குக் கொடுத்து வந்த கடன்களையெல்லாம் நிறுத்தி விட்டார்கள். கிணறுகள் வெட்டுவதற்கும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கொடுத்து வந்த கடனை அக்ரிகல்சுரல் ரீபைனான்ஸ் கார்ப்பரேஷனுடைய உத்தரவின்பேரில் நிறுத்தி விட்டார்கள். ஏற்கனவே இந்த அக்ரிகல்சுரல் ரீ பைனான்ஸ் கார்ப்பரேஷனுடைய பணம் வருவதற்கு முன்னால் நடைமுறையில் தாராளமாகக் கடன் கொடுத்து வந்தார்கள். அது இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. அது மறுபடியும் விவசாயி களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியில் அண்மையில் சிம்சன் நிறுவனங்களில் ஏற்பட்ட பலாத்காரம், வன்முறை இந்த மாநிலத்தின் நல்ல பெயரைக் கெடுக்கும் அளவுக்கு அமைந்துவிட்டது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியே பாதிக்கப்பட்டு விடுமோ என்று அச்சமாக இருக்கிறது. அதைப்பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. அதைப்பற்றிப் பேசி நல்ல ஒரு சூழ்நிலை உருவாகி வருவதை நான் கெடுத்துவிட விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்களும் தொழில் அமைச்சர் அவர்களும் அதைக் கவனித்து சீக்கிரம் மாநிலத்திற்கு இருந்துவந்த நல்ல பெயரை மீண்டும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வன்முறைகள் தொழிற் சங்கங்களில் இறங்காமல் பாது காக்க வேண்டும். மற்ற அரசியல் கட்சிகளும் போதுமான வரையில் அரசாங் கத்தோடு ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். மாநிலத்தினுடைய பெயருக்கு இழுக்கு வந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அதைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன் போலல்லாமல், அரசு நிறுவனங்கள் தொழில் துறையில் ஏராளமாக ஏற்பட்டு விட்டன. இவைகளை ஏற்படுத்தியதன் மூலமாக ஏற்கெனவே பப்ளிக் அகௌண்ட்ஸ கமிட்டியின் பரிசீலனைக்கு உட்பட்ட கணக்குகள் இப்பொழுது அப்பாற் போய் விட்டன. உதாரணமாக, நமது

போக்குவரத்துத் துறையின் கணக்குகள் இது வரை பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியின் பரிசீலனையில் இருந்தன. சட்டசபை அங்கத்தினர்களால் நியமிக்கப்பட்ட "பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி" இதைப் பார்த்துக்கொண்டிருந்தது. பரிசிலனை செய்துகொண்டிருந்தது. அப்படிச் செய்வது என்றால் வெறும் அங்கத்தினர்கள் மட்டுமல்ல. ஏ.ஜி. மேற்பார்வையில் இருந்தது. அவர் பரிசீலனை செய்து, பப்ளிக் அகௌண்ட்ஸ கமிட்டிக்குக் கொண்டு வருவார். போக்குவரத்துக் கழகமாக மாறிய பிறகு, "துறை"யிலிருந்து "கழகம்" ஆக மாறிய பிறகு, "பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி" பரிசீலனைக்கு வராது. இப்படிப் பல நிறுவனங்கள் இருக்கின்றன. வீட்டு வசதி வாரியம், குடி நீர் கழிவு நீர் வாரியம், குடிசை மாற்று வாரியம் என்று. இவை பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியில் வராது. அது அரசாங்கத்துக்கு நல்லது அல்ல. பொதுவாக, இவைகளையெல்லாம் பரிசீலனைக்குக் கொண்டுவர வேண்டும். பிச்சைக்காரர் புனர்வாழ்வு நிதி என்பதையெல்லாம் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டிக்குக் கொண்டு வருவதில் தவறில்லை. பரிசீலிப்பது அரசாங்கத்திற்கு நல்லது. "கமிட்டி ஆன் பப்ளிக் அண்டர்டேகிங்ஸ்" என்று பார்லிமெண்டில் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அதுபோல, இரண்டு சபைகளையும் சேர்ந்த உறுப்பினர்கள், பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள், சேராதவர்கள் ஆகியவர்களை நியமிக்கலாம். அரசாங்கத்தால் நடத்தப்படுகிற தொழில் நிறுவனங்கள் இவைகளைச் சமாளிப்பதே அரசாங்கத்திற்கு பெரிய காரியமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்றவைகளை அங்கத்தினர்கள் பேசி விட்டார்கள். நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முதல் துணை மதிப்பீட்டின் அடிப்படையில், மேலவையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொதுவாக, இன்று அதிகமாகப் பேசப்பட்ட விவகாரம், அண்மையில் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வுகளைப் பற்றியதாகும். ஏற்கெனவே, இரண்டாவது சம்பளக் குழுவின் சார்பில் அறிவிக்கப்பட்ட பரிந்துரைகளை ஒட்டி, ரூ. 22 கோடிக்கு மேல் அரசாங்க அலுவலர்களுக்கு அரசு ஊதிய உயர்வு அளித்ததையும், அப்படி ஊதிய உயர்வுகளைப் பற்றியதாகும். ஏற்கெனவே, இரண்டாவது சம்பளக் தோடு அவர்கள் அது வரை பெற்றுக்கொண்டிருந்த டி.ஏ. ஐயும் இணைத்து அதை அடிப்படைச் சம்பளம் என்ற அளவுக்கு மாற்றியமைத்து. இரண்டாவது ஊதியக் குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்ததையும், அதை நாட்டில் அனைவரும் வெகுவாக வரவேற்றதையும் இந்த அவையிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதன்பிறகு, சில முரண்பாடுகள் இருக்

கின்றன என்றும், எடுத்துச் சொல்லப்பட்டு, சில கிளர்ச்சிகள் உருவாகி, அதன் தொடர்ப்பாக. தனி நபர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கைகளும் பரிந்துரைகளும் அரசுக்குத் தரப்பட்டு, அரசாங்கத்தின் சார்பில் அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு அலுவலர்களுடைய சங்கங்களும் அளித்துள்ள மனுக்கள், கோரிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலும், சில ஊதிய உயர்வுகளை இந்த அவையில் அறிவித்திருக்கின்றேன். இங்கே பேசிய உறுப்பினர்களெல்லாம் தனி நபர் குழு சரியாக இயங்கவில்லை என்ற கருத்தை மறைமுகமாகவும், அதிலும் குறிப்பாக நம்முடைய திரு. ராஜா அய்யர் அவர்கள் இன்னொரு குழு அமைக்க வேண்டுமென்கிற கருத்தை வெளிப்படையாகவும் இங்கே சொல்லி விட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் முரண்பாடுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்த கட்டத்தில், தனி நபர் குழு பல்வேறு பிரச்னைகளில், அலுவலாளர்கள் கோரிக்கைகளில் முரண்பாடுகள் இல்லை என்று அறிவித்தவைகளில் கூட, அரசாங்கம் வலிய முன் வந்து முரண்பாடுகள் இல்லாவிட்டாலும், ஏற்கெனவே அந்தப் பகுதியில் அரசு அலுவலாளர்களுக்கு அரசு சார்பாக அறிவித்திருக்கின்ற உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஊதிய உயர்வுகள் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் அதிருப்தி இருப்பதாக இங்கே பேசப்பட்டது. வேடிக்கை என்னவென்றால், பத்திரிகைகளில் அதிருப்தியைத் தாங்கி அறிக்கைகள் வருகின்றன. ஆனால், அதன் தொடர்பாக அலுவலாளர் சங்கத் தலைவரும் செயலாளரும் என்னைச் சந்தித்து, மாலையிட்டு வாழ்த்தி நன்றி தெரிவித்து விட்டுப் போகிறார்கள். இப்படி ஒரு வேடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. இன்று பிற்பகல் கூட நான் சட்டசபையில் பேசி விட்டு வெளியில் செல்லுகிற நேரத்தில் ஜூனியர் இஞ்ஜினியர்கள் என்னைச் சந்தித்து, மாலை அணிவித்து, நன்றி தெரிவித்துக்கொண்டார்கள். ஆனால், பத்திரிகைகளில் பார்த்தால், ஜூனியர் இஞ்னியர்கள் அதிருப்தியைத் தெரிவித்தார்கள் என்று வருகிறது. இந்த ஊதியக் குழுக்கள் எவ்வளவு கோடி ரூபாய்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் தயவு செய்து மறந்து விட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆரம்பத்தில், இரண்டாவது சம்பளக் குழு போட்டு, அதன் முடிவுகளை அமுல்படுத்திய நேரத்தில் சற்றேறக் குறைய 23 கோடி ரூபாயை அரசு ஊழியர்களுக்கு வழங்க வேண்டியவர்களானோம். அற்குப் பிறகு, நான்கைந்து திங்களுக்கு முன்பு நம் என்.ஜி.ஓ. ஊழியர்கள் நடத்திய மாநாட்டில் தெரிவித்ததற்கு இணங்க ரூ. 10 உயர்வு அளித்ததன் மூலமாக 6 கோடி ரூபாயை அவர்களுக்கு வழங்கும் நிலைமை அரசு பெற்றது. இப்

பொழுது அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஊதிய உயர்வுகள் மூலம், மேலும் ஒரு 5 கோடி ரூபாய், கிட்டதட்ட 33 கோடி, 34 கோடி ரூபாய் ஊழியர்களுக்கு அரசாங்கச் சார்பில் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விட வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு தடவையும், பரிசீலனை முடிந்து அறிவிப்புகள் வருகிறபொழுதெல்லாம், இதில் முரண்பாடு இருக்கிறது என்று ஒவ்வொரு பிரிவினரும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது அல்லது மனக்குறைகளை வெளிப்படுத்துவது என்பது நல்லதல்ல என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமை பட்டிருக்கிறேன்.

பொதுவாக, தென்னகத்தில் இருக்கின்ற நான்கு மாநிலங்களை நாம் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுவோமானால், வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒவ்வொரு துறையின் அரசு அலுவலாளர்களுக்கும் நாம் அதிகமாக ஊதியத்தை வழங்கி வருகிறோம். குறிப்பாக, ஸெக்ரடேரியட் அஸிஸ்டெண்ட்ஸ் இப்பொழுது கருப்பு பேட்ஜு அணிந்து கொண்டு, இரண்டு மூன்று நாட்களாகப் பணியாற்றுகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்கு, தமிழ் நாட்டில் அண்மையில் அறிவித்த ஊதிய உயர்வு அடிப்படையில் அவர்கள் 'மினிமம் பே' பிளஸ் 'டி.ஏ.' அவர்கள் இன்றைக்குப் பெறுவது மினிமம் 340 ரூபாய். மேக்ஸிமம் 540 ரூபாய். ஆந்திரப் பிரதேசத்தில் மினிமம் ரூ. 286. மேக்ஸிமம் 462 ரூபாய். மைசூரில் மினிமம் 312 ரூபாய். மேக்ஸிமம் 461 ரூபாய். கேரளத்தில் மினிமம் 259 ரூபாய். மேக்ஸிமம் 463 ரூபாய். இந்த மூன்று மாநிலங்களையும் விட நம் மாநிலத்தில் மினிமம் ரூ. 340 ஆகவும் மேக்ஸிமம் 540 ரூபாயாகவும் இருப்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அதை போலவே, செக்ரெடேரியட் சூப்பிரண்டெண்டுகளுக்கு தமிழ் நாட்டில் மினிமம் ரூ. 465, மேக்ஸிமம் ரூ. 790. ஆந்திரத்தில் மினிமம் ரூ. 462, மேக்ஸிமம் ரூ. 735. மைசூரில் மினிமம் ரூ. 436 மேக்ஸிமம் ரூ. 685. கேரளத்தில் மினிமம் ரூ. 456 பிளஸ் 27, மேக்ஸிமம் ரூ. 720 பிளஸ் 27, இது கொஞ்சம் அதிகமாகக் காணப்பட்டாலும், அவர்களுடைய இன்கிரிமெண்டைப் பார்த்தால், தமிழ் நாட்டில் ரூ. 425--25--600--30—-750 என்று உயருகிறது. ஆனால் கேரளத்தில் ரூ. 310—20—350—25—600 என்று தான் உயருகிறது. அது மட்டுமல்ல. அங்கேயெல்லாம் டி.ஏ. வை நாம் மெர்ஜ் செய்ததைப் போல அவர்கள் யாரும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆந்திரத்தில், செக்ரடேரியட் அஸிஸ்டெண்ட்களை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய டி.ஏ.ஐ பார். மினிமம் பே ரூ. 136 என்றிருக்கிறது. நாம் 40 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறோம். இந்த ரூ. 136ஐச் சேர்த்தால்தான் ஆந்திரத்தில் 286 ரூபாய் டோடல் மினிமம் ஆகிறது. அங்கே பேசிக் பே, ஸ்கேல் ஆப் பே 150 என்று தான்

இருக்கிறது. அதே நேரத்தில், தமிழகத்தில் 300 ரூபாய் 'பேசிக் பே' என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அக்ரிகல்சுரல் டிமான்ஸ்ட்ரேடர் பதவிக்கு தமிழகத்தில் மினிமம் பே ரூ. 415 பிளஸ் டி.ஏ., மேக்ஸிமம் பே பிளஸ் டி.ஏ. ரூ. 690. ஆந்திரத்தில் மினிமம் ரூ. 336, மேக்ஸிமம் ரூ. 576, மைசூரில் மினிமம் ரூ. 411, மேக்ஸிமம் ரூ. 679. கேரளத்தில் மட்டும் 8 ரூபாய் அதிகமாக இருக்கிறது. 423 ரூபாய் 693 ரூபாய் என்பதில் அங்கே 3 ரூபாய் அதிகமாக இருக்கிறது. அது தான் பெரிய வித்தியாசம். செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் டீச்சர் என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் ஆர்டினரி கிரேட் ரூ. 175. மேக்ஸிமம் ரூ. 250 ; செலக்ஷன் கிரேட் ரூ. 205—295. ஆந்திரத்தில் ரூ. 144 முதல் ரூ. 207 வரை. மைசூரில் நான்-எஸ்.எஸ்.எல்.சி. அன்-டிரெய்ன்ட் ரூ. 168 முதல் ரூ. 263. நான்—எஸ்.எஸ்.எல்.சி. டிரைய்ன்ட் ரூ. 186 முதல் ரூ. 342. கேரளத்தில் ரூ. 214-லிருந்து ரூ. 333. இதை அவசர அவசரமாக நம் முத்துசாமி குறித்துக்கொள்ளுவார். ஆனால், இது ஒன்லி ஃபார் ஸ்கூல் பைனர் டீச்சர்ஸ். நான் சொன்னது வேறு. நம் தமிழ் நாட்டில் தேர்ட் பார்ம் பிளஸ் டு இயர்ஸ் டிரெயினிங் பெற்றவருக்குத் தரும் சம்பளம் ரூ. 175-லிருந்து ரூ. 250 வரை என்பதை மறக்க வேண்டாம். செகண்டரி கிரேட் டீச்சர்களுக்கு தமிழ் நாட்டில் ஆர்டினரி கிரேட் ரூ. 235 மினிமம். ரூ. 365 மேக்ஸிமம் செலக்ஷன் கிரேடுக்கு ரூ. 275 மினிமம். ரூ. 440 மேக்ஸிமம் ஆந்திரத்தில் ரூ. 208 முதல் ரூ. 336, மைசூரில் ரூ. 205 முதல் ரூ. 362, கேரளத்தில் ரூ. 214 முதல் ரூ. 333. வெடரினரி அசிஸ்டெண்ட் சர்ஜன்கள் கிளர்ச்சி நடைபெற்றது இப்பொழுது, உங்களுக்குத் தெரியும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரை, ஆர்டினரி கிரேட் ரூ. 440 ஆக இருந்ததை மாற்றி ரூ. 475 மினிமம், ரூ. 690 மேக்ஸிமம். செலக்ஷன் கிரேட் ரூ. 565 மினிமம், ரூ. 790 மேக்ஸிமம். ஆந்திரத்தில் ரூ. 387 மினிமம், ரூ. 835 மேக்ஸிமம். மைசூரில் ரூ. 381 மினிமம், ரூ. 679 மேக்ஸிமம். கேரளத்தில் ரூ. 433 மினிமம், ரூ. 747 மேக்ஸிமம். பி.டி. அஸிஸ்டெண்டுக்கு தமிழ் நாட்டில் ரூ. 340 மினிமம், ரூ. 540 மேக்ஸிமம். செலக்ஷன் கிரேடுக்கு அதிலே ரூ. 440 மினிமம், ரூ. 690 மேக்ஸிமம். ஆந்திரத்தில் ரூ. 286 முதல் ரூ. 462. மைசூரில் ரூ. 317 முதல் ரூ. 625. கேரளத்தில் ரூ. 259 முதல் ரூ. 443 வரை. ஜூனியர் இஞ்ஜினியருக்குத் தமிழ் நாட்டில் ரூ. 465 மினிமம், ரூ. 740 மேக்ஸிமம். ஆந்திரத்தில் ரூ. 462 மினிமம், ரூ. 735 மேக்ஸிமம். மைசூரில் ரூ. 461 மினிமம், ரூ. 842 மேக்ஸிமம். கேரளத்தில் ரூ. 453 மினிமம், ரூ. 690 மேக்ஸிமம். இப்படி எல்லா வகையிலும் பார்த்தால், மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் மிஞ்சுகிற அளவுக்கு அதிக ஊதியத்தை நம்முடைய தமிழ் நாட்டிலிருக்கின்ற அரசாங்க ஊழியர்கள் பெறுகிறார்கள் என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனாலும், நண்பர் திரு. முத்துசாமி

போன்றவர்களுக்கு, அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிற காரணத்தால், அவர்களை ஆதரிக்காவிட்டால் வம்பு வருமென்று எண்ணுகிற வேறு சிலருக்கு இதில் குறை சொல்லத் தோன்றுகிறது.

நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் ஊமைப்பிள்ளை பேசியதாக அடிக்கடி முதலமைச்சர் கதை சொல்லுவார், அது போலத்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அந்தக் கதை முழுவதையும், நல்ல வேளையாகச் சொல்லாமல் விட்டார். கடைசியாக, பிள்ளை பேசியபொழுது, ஆவலோடு கேட்டபொழுது, அது தாயாரைப் பார்த்து அம்மா, உன் தாலி எப்பொழுது அறுந்து விழும் என்று முதன் முதலாகக் கேட்டதாகக் கதை. அந்தக் கதையை இதற்கு உதாரணமாகக் கூறினார். நான் கேட்கிறேன். இந்த 4, 5 ஆண்டுகளில் ஆசிரியர்களுக்கு இந்த அரசு செய்திருக்கின்ற காரியங்கள் எல்லாம் ஊமைப்பிள்ளையினுடைய பேச்சா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: முரண்பாட்டுக் குழு அறிக்கை பற்றி மட்டும் சொன்னேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நல்லவேளையாக, ஊமைப்பிள்ளை இல்லை, உள்ளபடியே பேசியது என்று ஒப்புக் கொண்டதற்கு நன்றி. ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று முதல் தடவையாக இந்த அரசு உத்தேசித்து 19,500 பேருக்கு முதல் தடவையாக ஹையர் கிரேடாக இருப்பவர்களுக்கு, செகண்டரி கிரேட் ஆசிரியர் சம்பளம் கொடுத்த அரசு இந்த அரசு என்பதை ஆசிரியர் சமுதாயம் மறக்கக் கூடாது. இந்த வருஷம் 19,500 அல்லாமல் மேலும் 5,000 ஆசிரியர்களுக்கு, ஹையர் கிரேடில் இருப்பவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளத்தை இந்த அரசு வழங்கி வந்திருக்கிறது. 2,000 இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களுக்கு முதலாண்டு ஆசிரியர் ஊதியம் வழங்கப்படுகிறது. அதை அமுல் செய்கிறோம் என்பதை மறக்கக் கூடாது. மருத்துவ வசதி, நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப் படி இது போன்றவைகளை தனியார் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள் உட்பட அனைவரும் பெறுகிற வாய்ப்பினை அவர்களுக்கு வழங்கியது இந்த அரசு என்பதை ஆசிரியர் சமுதாயம் மறக்கக் கூடாது. பி.டி. ஆசிரியர்களில் செலக்ஷன் கிரேடை உருவாக்கியது இந்த அரசு என்பதை மறக்கக் கூடாது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களிலும் செலக்ஷன் கிரேட்டை உருவாக்கியது இந்த அரசு என்பதை மறக்கக்கூடாது. தலைமை ஆசிரியர்களுக்குத் தனிச் சம்பளத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மறக்கக் கூடாது. ஏராளமான பல்வேறு வசதிகளை ஆசிரியர் சமுதாயத்திற்கு இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதை மறக்கக் கூடாது. இதற்குப் பிறகும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது, அதிருப்தியைத் தெரியப்படுத்துவது,

மற்றக் கட்சி உறவோடு போராட்டத்தில் ஈடுபடுவது தவிர வேறு வழி இல்லை என்று கூறுவதெல்லாம் நல்லதல்ல. நான் ஒன்று சொல்வேன். காலையிலே கூட பேரவையிலே குறிப்பிட்டேன். 400 ரூபாய் ஊதியம் பெறுகின்றவர்கள் அதை 500 ரூபாய் ஆக்க வேண்டுமென்று போராடுகிற நேரத்தில் அந்த இடையிலே இருக்கிற 100 ரூபாய்க்காகப் போராட்டம் நடத்தக்கூடிய ஆசிரியர் சமுதாய மானாலும் அல்லது அரசாங்க ஊழியர் சமுதாயமானாலும் அவர்களுக்கு நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வேன், "அருமை நண்பர்களே, நீங்கள் கேட்கின்ற அந்த 100 ரூபாய் உயர்வு இருக்கிறதே, அந்த உயர்வு, உயர்வு என்கின்ற அந்த 100 ரூபாயைக்கூட தன்னுடைய வாழ்க்கையில் ஊதியமாகப் பெற முடியாத லட்சோப லட்சம் ஏழை மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து மறந்துவிடக்கூடாது". வாங்குகின்ற வரிப்பணத்தை யெல்லாம் அரசாங்க ஊழியர்களுக்கே கொட்டிக் கொடுத்துவிட்டு ஒரு அரசு அவர்களைத் திருப்திப்படுத்திக் கொண்டே இருக்குமானால், வரி கொடுத்துக் கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தால், அரசு தாங்காது. வரி கொடுப்பவர்கள் கேட்பார்கள். "நீங்கள் அரசு ஊழியர் களுக்கே அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள். 23 கோடி என்றீர்கள்; பிறகு 6 கோடி என்றீர்கள்; பிறகு 5 கோடி என்று அறிவித்து இருக்கிறீர்கள். இப்படியே எங்களது வரிப்பணத்தை வாங்கி கொடுத்துக்கொண்டிருப்பீர் களானால், என்னென்ன திட்டங்கள் எங்களுக்குத் தரப்போகிறீர்கள்? எங்க ளிடத்திலே வாங்குகின்ற வரிக்கு வழி என்ன?'' என்று கேட்கத் தொடங்கு வார்களானால், பிறகு அவர்களையும் சமாளிக்கவேண்டிய ஒரு நெருக்கடியான நிலைமை அரசுக்கு ஏற்படுமா, ஏற்படாதா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். நான் காலையிலே சொன்னதை மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் யாருடைய மனதையும் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. "நன்றாக தெளிவு தெரிந்து கொண்டீர்கள். இது குட்டக் குட்ட குனிகிற அரசு என்று தெரிந்து கொண்டீர்கள். ஆகவே, குனியக் குனிய குட்டுகிறீர்கள். இனிமேல் குனிந்துகொண்டே இருக்க முடியாது. கொஞ்சம் நிமிர்ந்து இருக்க வேண்டிய நிலைமையில் இந்த அரசு இருக்கிறது" என்பதை மாத்திரம் நான் மிகுந்த பணிவன்போடு அரசாங்க ஊழியர்களானாலும், ஆசிரியர் சமுதாயத்து பெருமக்களானாலும், அவர்களுக்கெல்லாம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். முடியாவிட்டால், இவ்வளவையும் வழங்குவதற்கு ஏற்ற அரசு வருமேயானால், நாங்கள் விலகிக்கொள்ளக்கூடத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட அரசு வரும், நீங்கள் விலகிக்கொள்ளுங்கள், அவர்கள் நிச்சய மாக நாங்கள் கேட்டதையெல்லாம் கொடுப்பார்கள் என்று இந்த ஆசிரியர் சமுதாயமும், அல்லது அரசாங்க ஊழியர்களும் கருதுவார்களானால், நாங்கள் விலகிக்கொள்ளக் கூடத் தயாராக இருக்கிறோம். மறுநாள் வந்து தாங்கள்

1972 ஆகஸ்ட் 22] [டாக்டர் மு. கருணாநிதி]

இவ்வளவு அதிகம் தருவோம் என்று அவர்கள் எல்லாம் இன்றைக்கு அறிவிப்பார்களானால், அதற்குக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம். நாட்டினுடைய பொருளாதார நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். நாம் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். கிராமப்புறத்தில் இருக்கின்ற லட்சோப லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டிய திட்டத்தை இன்றைக்கு மத்திய அரசும் சரி, மாநில அரசுகளும் சரி எடுத்துக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையிலே மற்ற மாநிலங்களையெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு நல்ல காரியங்கள் நடத்தி வருகிறோம். அதையும் மறந்துவிடக் கூடாது. அதற்கு ஒத்துழைப்பு தருகின்ற வகையிலே, "எங்களுக்கு இது போதும், இனிமேல் வருங்காலத்தில் வேண்டுமானால் அதுபற்றி யோசியுங்கள். ஆகவே நாங்கள் கேட்ட காரணத்திற்காக இதோடு முற்றுப்புள்ளி வைத்து விடாதீர்கள். சுமாவாக இருக்கட்டும்" என்று சொல்லுங்கள். நான் அதை மறுக்கவில்லை. நான் முற்றுப்புள்ளி வைத்து விட்டதாகச் சொல்லவில்லை. யாருடைய பிரச்னையும் இன்றோடு தீர்ந்துவிடுகிற பிரச்னையல்ல. வாழ்க்கையில் காலம் செல்லச் செல்ல, ஆசிரியர் சமுதாயமானாலும் மற்ற அரசாங்க ஊழியர்களுடைய சமுதாயமானாலும், அவர்களுக்குத் தேவைகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. அப்படித் தேவைகள் பெருகுகின்ற நேரத்திலே, அதனைக் கவனிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்று உணராமலில்லை. எத்தனையோ முறை எல்லா முதலமைச்சர்களும் எடுத்துச் சொல்லியும்கூட, மத்திய அரசு மாநில முதலமைச்சர்களைக் கலந்து கொள்ளாமலே, சம்பள உயர்வுகளை அளிக்கிறது; ஊதியக் குழுக்களைப் போடுகிறது. நாம் சம்பள உயர்வுகளை அளித்தால், அவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள் அல்லது தயங்குகிறார்கள் அல்லது தயக்கம் காட்டுகிறார்கள். அதற்கு நான் டெல்லிப் பட்டணத்திற்கு நடையாய் நடக்கவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சங்கடங்கள் வருகின்றன. இப்போது அண்மையிலே 10 ரூபாய் அளித்தோம். அதிலே 6 கோடி ரூபாய் தமிழக அரசுக்குச் செலவாகிறது என்றால், அதை மத்திய அரசு ஒத்துக்கொள்ள வேண்டும். பைனான்ஸ் கமிஷனில் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தயக்கம் காட்டுகிற நிலைமைதான் டெல்லியிலே இருக்கிறது, பைனான்ஸ் கமிஷனிலே இன்றைக்கு இருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் மறந்துவிடக் கூடாது. இன்னொன்று நம்முடைய வரவு-செலவுத் திட்டம் மன்றங்களிலே வைக்கப்பட்ட நேரத்தில் நான் நினைவுபடுத்தியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நண்பர் திரு. தாமோதரன் போன்றவர்களும் அதுபற்றி வெகு விரிவாகப் பேசியிருக்கிறார்கள். 60 கோடி ரூபாய் 'ஓவர்டிராப்ட்' என்கிற அளவிலே இந்த அரசாங்கம் வாங்கியிருந்தது. அதைப் போலவே இந்தியாவிலே பல்வேறு

மாநிலங்களிலே "ஓவர்டிராப்ட்" இருந்தது. அதற்கு நாம் டெல்லியிலே பேச்சுவார்த்தை நடத்தி, திட்ட அமைச்சரோடும், திட்டக் குழுவோடும் பேச்சு வார்த்தை நடத்தி, ஓரளவுக்கு 'அட்ஜஸ்ட்மென்ட்' செய்து, அதை ஆண்டு தோறும் இந்த அளவுக்குக் கொடுப்பது என்கின்ற முறையிலே நாம் சீர்செய்து வைத்திருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நம்முடைய தலைக்கு மேலே ஒரு கத்தி போல அந்த 60 கோடி ரூபாய் 'ஓவர்டிராப்ட்' தொங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். "கள்ளுக்கடையிலே, சாராயக்கடையிலே 40 கோடி ரூபாய் வந்துவிட்டது. அதையெல்லாம் அள்ளி எங்களுக்குக் கொடுத்துவிடக்கூடாதா" என்று சட்டப் பேரவையிலே கூட சில பேர் பேசினார்கள். நான் அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக்காட்ட விரும்பவில்லை. ஏனென்றால் பதில் சொல்ல நேரமே இல்லாமல் போய்விட்டது. 5 நிமிடம்தான் கிடைத்தது. 40 கோடி ரூபாய் வந்துவிட்டது, அதைக் கொடுக்கக்கூடாதா என்றால், 40 கோடி ரூபாய் பொதுக் கணக்கிலே சேருகிறது. நாட்டு மக்களுக்கு, கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பணம் பரவலாகச் செலவழிக்கப்படுகிறதே அல்லாமல் வேறல்ல. இன்னும் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் நாம் மறந்துவிடாமல் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று உறுப்பினர்களை மெத்தப் பணிவன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பட்டணங்களைப் பளபளப்பாக ஆக்கிக் கொண்டிருப்பதைவிட மேலும் பட்டிக்காட்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பட்டணத்தில் நீங்கள் நெடு நாட்கள் தங்குவதை விட பட்டிக் காட்டுக்குச் சென்று அங்கிருக்கிற மக்களைச் சந்திக்க வேண்டுமென்று நான் அவரைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். பார்க்கிற நேரம் எல்லாம் பட்டணத்தில் இருக்கிறார். பட்டணம் பளபளப்பாக இருக்கிற காரணத்தால், அதிகமாகப் பட்டணத்தில் தங்குகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இந்த அரசின் கொள்கை பட்டணம் பளபளப்பாவது மட்டுமல்ல, பட்டணமும் பளபளப்பாக வேண்டும் என்பது தான். அப்படிப் பளபளப்பாகாவிட்டால், சுற்றுலா வளராது. சுற்றுலாவின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய பொருளாதாரம் பெருகும். அது நாட்டுக்கு இன்றியமையாதது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. பல்வேறு நாடுகள் இன்றைக்கு தங்களுடைய பொருளாதாரத்தைச் சுற்றுலாத் துறையின் மூலமே பெருக்கிக் கொண்டு வருகின்றன. என்ன காரணமோ, 25 ஆண்டுக்காலம் நம்முடைய சுதந்திர ஆட்சியில் சுற்றுலாத் துறையை வளர்க்க வேண்டிய அளவுக்கு வளர்க்கவில்லை. இத்தாலி நாட்டுக்குச் சென்றால், சுற்றுலா மூலம் அந்த நாட்டுக்குக் கிடைக்கின்ற ஆண்டு வருமானம் எழுநூறு

கோடி ரூபாய் என்று சொல்லுகிறார்கள். சுவிட்சர்லாந்து நாட்டுக்குச் சென்றால், அவர்கள் சொல்லுகிறார்கள், சுவிட்சர்லாந்தில் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கின்ற சுற்றுலா வருமானமும் அமெரிக்க நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சுற்றுலா மூலமாகக் கிடைக்கிற வருமானமும் ஏறத்தாழ ஒன்றேதான் என்று சொல்லுகிறார்கள். ஆகவே சுற்றுலா மூலமாகக் கிடைக்கிற வருமானம் சாதாரணமானதல்ல. பட்டணம் பளபளப்பாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், நம்முடைய சரித்திரச் சான்றுகள், வரலாற்றுப் பேருண்மைகள், தொன்மையான சின்னங்கள் இவைகள் எல்லாம் பாதுகாக்கப்படுவதாலும் பல புதுமைகள் அங்கே அவ்வப்போது தோன்றுவதாலும், உருவாக்கப்படுவதாலும், பட்டணத்திற்கு வருகிற மக்கள், வெளி மாநிலத்திலிருந்து வருகிற மக்கள், வெளிநாடுகளிலிருந்து வருகிற மக்கள் அவர்களைக் கவர்கிற வகையில் பட்டணம் அமைந்திருந்தால்தான், சுற்றுலா மூலமாவது நாட்டினுடைய பொருளாதாரம் நல்ல வகையில் வளர முடியும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வழக்கம் போல் கூட்டுறவுத் துறையைப்பற்றி நிறையப் பேசியிருக்கிறார்கள். இடையிடையே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் அவரைக் குறுக்கிட்டுப் பதில் சொல்லியிருக்கிற காரணத்தால், இப்போது நம்மிடையே இருக்கிற கூட்டுறவாவது நிலைக்கட்டும் என்பதற்காக நான் அதில் அதிகமாகப் பதில் சொல்ல விரும்பவில்லை. அந்தக் கட்டத்தைத் தாண்டிச் செல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பக்கர் அவர்கள் தன்னுடைய கன்னிப்பேச்சில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் அரும் பெரும் சாதனைகளையெல்லாம் வெகுவாகப் பாராட்டிப் பேசியதற்கு நான் என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும், தோழமைக் கட்சி என்பதற்காக மட்டுமல்ல, அவர்கள் தங்களுடைய புதிய பேச்சில் நம் மனம் உருகிற அளவுக்கும் இன்னும் ஊக்கத்தோடு இந்தப் பணியினை, இந்த ஊழியத்தை நாம் செய்திட வேண்டுமென்று உற்சாகம் ஏற்படுகிற அளவுக்கும் பேசி அமைந்ததற்கு நான் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் அவர்கள் பாராட்டிய அதே நேரத்தில் ஒன்றை நான் குறிப்பிடாமலிருக்க முடியாது. அவர்கள் கண் ஒளி முகாம்கள் பற்றிச் சொன்னார்கள். அதைப் போலவே பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள்பற்றிச் சொன்னார்கள். ஆனால் அவைகளைப் பாராட்டுவதற்குப் பதிலாக, எப்படியோ பெரிய காரியங்கள் நடைபெறுகிற நேரத்தில், அதுபற்றி சில குற்றம் குறை சொல்லப்பட்டு அந்தப் பெரிய காரியத்தினுடைய தன்மைகள் நாட்டில் கெடுக்கப்படுகின்றன. பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதி அல்லது கண் ஒளி முகாம் நிதி இவைகளுக்கெல்லாம் கணக்கே இல்லை என்பது போல் தமிழ் நாட்டில் இருக்கின்ற மூதறிஞர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். அவர்களுடைய பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன. அதற்காக மிகவும் வருத்தப்

படுகிறேன். உள்ளபடியே அந்த நிதிகள் இரண்டும், 'ஐ கேம்ப் பண்டு' கண் ஒளி நிதியும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியும், அதனுடைய பணிகளுக்கான சட்டசபை அனுமதிகளைப் பெறுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதோடு சட்டசபை அனுமதியைப் பெறுகிற காரணத்தால், அந்த அடிப்படையில் அக்கவுண்டன்ட் ஜெனரலின் தணிக்கைக்கு அந்தக் கணக்கு உட்படுகிறது. அந்தத் தணிக்கைக்கு உட்படுவது மாத்திரமல்ல, அதற்கு மேலும் அந்த நிதிகளின் வரவு செலவுக் கணக்குகளை 'எக்சாமினர் ஆப் லோக்கல் பண்டு அக்கவுன்ட்ஸ்' அவர்களும் தணிக்கை செய்கிறார்கள். அந்தப் பணம் ஏதோ நிதி என்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழக நிதியில் இல்லை, அல்லது கருணாநிதியின் தனிப்பட்ட நிதியில் இல்லை. சர்க்காருடைய கணக்கில் ரிசர்வ் பாங்கில் வைக்கப்பட்டு, பைனான்ஸ் டிப்பார்டுமென்டினுடைய டெபுடி செக்ரட்டரி அதனுடைய டிரஷரராக இருந்து, அதைப் பரிபாலித்து வருகிறார். இந்த விவரத்தை நான் இந்த மன்றத்தின் மூலமாக நாட்டுக்குச் சொல்லவேண்டியது அவசியமாகிறது யாரோ ஏதோதானேக்கள் இதைப்பற்றிச் சொல்லுவார்களேயானால், நான் கவலைப்பட மாட்டேன். மிகப் பெரியவர்கள் சந்தேகத்தைக் கிளப்பிய காரணத்தால், அதனுடைய கணக்கு விவரங்கள் எப்படி இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளானேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். பல்வேறு துறைகளிலே இன்றைக்கு இருக்கிற நிலைமைகளை ஆராய்வதற்கேற்ப, பார்லிமெண்டில் இருப்பது போல், 'பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ கமிட்டி' ஒன்று வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கமிட்டியை அமைப்பதற்கு நான் கையெழுத்துப் போட்டு இரண்டு நாட்கள் ஆகின்றன என்பதை நான் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு வேளை அவர் தெரிந்து சொன்னாரோ என்னவோ? வேடிக்கைக்குச் சொன்னேன். பூர்வாங்கமாக ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்று அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் சிம்சன் பிரச்னை பற்றிச் சொன்னார்கள். பிறகு அதைப்பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை, நல்ல சூழ்நிலை வளரும் என்று சொன்னார்கள். அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்கள். எல்லா அரசியல் கட்சிகளும் அதில் ஒத்துழைத்து தொழில் அமைதி காண வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அழைப்பில் நானும் கலந்துகொள்ளுகிறேன். என்னுடைய இணக்கத்தையும் அதில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றத் தலைவர்களும் எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்கள், இந்த அரசு துணை மதிப்பீட்டில் எடுத்துச் சொல்லப்

பட்ட எல்லா கருத்துக்களுக்கும் பதில் சொல்லாவிட்டாலும் அவைகள் கவனத்தில் வைத்துப் பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்து, நல்ல கருத்துக்கள் வழங்கிய உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

5. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

228. Notification issued with G.O. Ms. No. 826, Rural Development and Local Administration, dated the 14th April 1972 directing that the Batlagundu Panchayat Union Council be dissolved with effect on and from the 15th April 1972. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

229. Notification issued with G.O. Ms. No. 871, Rural Development and Local Administration, dated the 21st April 1972 directing that the Kalligudi Panchayat Union Council be dissolved with effect on and from the 22nd April 1972. [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

230. Notification issued with G.O. Ms. No. 167, Home, dated the 19th January 1972 in regard to amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

B. Reports, Notifications and Other Papers.

56. Notification issued with G.O. Ms. No. 2080, Revenue, dated the 22nd July 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed by Thirumathi Rajalakshmiammal, Pongalur, Coimbatore district.

57. Notification issued with G.O. Ms. No. 2069, Revenue, dated the 21st July 1972 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the morgage deed to be executed by Thiru N. Venugopalan, formerly permanent Assistant, Public Works Secretariat and now working in the Tamil Nadu Electricity Board, in favour of the Government, in connection with the house building advance of Rs. 12,960 (rupees twelve thousand nine hundred and sixty only) obtained by him.

@ 58. Report of Dr. Paul Committee on the Service Conditions of teachers in Aided Schools.

* 59. Report and Proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Debt Relief Bill. 1972 (L.A. Bill No. 21 of 1972).

* 60. Report and Proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972).

@ 61. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on the 31st March 1972 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August, 1969 :—

1. Thiru P. Thirugnanasambandam
2. Thiru M. Sankaralingam
3. Thiru Kattoor Gopal
4. Thiru K. Rajaram
5. Thiru S. Narayanaswamy
6. Thiru M. Rajah Iyer
7. Thiru M. Ramanathan.

& 62. The Tamil Nadu Debt Relief Bill, 1972 (L.A. Bill No. 21 of 1972) as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 19th August 1972.

@ Laid on the table of the House on 21st August 1972.

& 63. The Tamil Nadu Agriculturists Relief (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 22 of 1972) as passed by the Assembly.

64. Annual Administration Report of the Stationery and Printing Department for the year 1970-71.

65. Report of the Committee on Public Accounts on "New Service/New Instrument of Service" for 1972–73.

66. Fourth Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation on the Report on the action taken by the Departments on the recommendations of the Committee.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

& Circulated to all M.L.Cs. on 21st August 1972.

இணைப்பு I.

[29 ஆம் பக்கத்திலுள்ள 197-ம் எண்ணுள்ள உடுக் குறியிட்ட வினவின் விடையைக் காண்க.]

மாவட்டம்.	தொழிற்பேட்டை அமைந்துள்ள இடம்.	திங்கள் ஒன்றுக்கு சதுர அடி ஒன்றுக்கு விதிக்கப்படும் வாடகை வீதம். காசு.
(1)	(2)	(3)
சென்னை	கிண்டி	18
செங்கற்பட்டு	அம்பத்தூர்	13
	மாதவரம்	12
	காக்கலூர்	10
	காஞ்சிபுரம்	5
வட ஆர்க்காடு	காட்பாடி	10
	அரக்கோணம்	9
தென் ஆர்க்காடு	விருத்தாசலம்	இடத்திற்கு வந்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் முடிந்துள்ள அனுபோகதாரர்களுக்கு 10 காசும், 5 ஆண்டுகள் முடிந்திராத வர்களுக்கு 7 காசும்.
	வடலூர்	5
தஞ்சாவூர்	கும்பகோணம்	8
	நாகப்பட்டினம்	5
	தஞ்சாவூர்	10
திருச்சிராப்பள்ளி	அரியமங்கலம் (திருச்சி)	13
	திருவெரும்பூர்	10
	கரூர்	5
	புதுக்கோட்டை	6

மாவட்டம்.	தொழிற்பேட்டை அமைந்துள்ள இடம்.	திங்கள் ஒன்றுக்கு சதுர அடி ஒன்றுக்கு விதிக்கப்படும் வாடகை. வீதம். காசு.
(1)	(2)	(3)
மதுரை	திண்டுக்கல்	8
	தேனி	5
	வத்தலகுண்டு	8
	மதுரை	13
இராமநாதபுரம்	விருதுநகர்	10
	காரைக்குடி	5
	சிவகங்கை	5
திருநெல்வேலி	பேட்டை	12
	கோவில்பட்டி	6
சேலம்	மேட்டூர்	6
தருமபுரி	கிருஷ்ணகிரி	7
கோயம்புத்தூர்	ஈரோடு	12
கன்னியாகுமரி	மார்த்தாண்டம்	8
	நாகர்கோவில்	7

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இ) தொழிற்பேட்டைகளில் உள்ள தொழிற்சாலைக் கொட்டகைகளில் இருந்துவரும் சிறு தொழிலதிபர்களுக்கு உதவிபுரியும் நோக்குடன் தொடக்கத்தில் குறைந்த வாடகை விதிக்கப்படுகிறது. தொடக்கக் கால அளவான ஐந்தாண்டுகளுக்குள் குறைந்த வாடகை வீதத்தைக் கட்டுப்படியாகும் வாடகை வீதத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று தொழிற்பேட்டை மதிப்பீட்டுக் குழு (1964-65) பரிவுரை செய்துள்ளது. குறைந்த வாடகை வீதத்தை உடனடியாக உயர்த்துவதனல் தொழிலதிபர்களுக்குப் பெரும் செலவுச் சுமை ஏற்படலாம். ஆகவே, குறைந்த அளவு வாடகை வீதங்கள் படிப்படியாகக் கட்டுப்படியாகும் வாடகை வீதத்திற்கு உயர்த்தப்பட்டு வருகின்றன.

(உ) ஒவ்வொரு தொழிற்பேட்டைக்கான குறைந்த வாடகை வீதத்தைப் படிப்படியாக மாற்றி அமைக்கும்போது அப்பகுதியின் தொழில் மேம்பாடு, தொழிலுக்கு ஊக்கம் கொடுப்பதன் அவசியம், தொழிலதிபர்களிடையே உள்ள ஊக்கம், தொழிற்பேட்டைக்கு வெளியே இதுபோன்ற வசதிக்குத் தோராயமாக விதிக்கப்படும் அங்காடி வாடகை ஆகியவை கருத்திற்கொள்ளப் படுகின்றன.

இணைப்பு II

[32 ஆம் பக்கத்திலுள்ள 201-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ)

வருடம்.	கிசான்.	அம்பர்.	டெக்ஸ்டைல்.
	(லட்சங்களில்.)		
1962–63	164·19	63·72	——
1963–64	169·18	56·59	——
1964–65	161·20	59·68	——
1965–66	188·60	58·58	——
1966–67	169·50	90·40	——
1967–68	88·44	69·76	23·43
1968–69	113·64	84·22	42·48
1969–70	158·54	96·11	53·03
1970–71	97·86	101·84	73·92

(இ) பயனடைந்த நூற்போர்களின் எண்ணிக்கை :

வருடம்.	கிசான்.	அம்பர்.	டெக்ஸ்டைல்.
1962–63	88,192	17,609	——
1963–64	88,449	13,446	——
1964–65	84·850	12,024	——
1965–66	1,12,731	12,056	——
1966–67	93·027	12·923	——
1967–68	75·877	14·198	——
1968–69	70,255	11,873	1,304
1969–70	67,198	10,392	1,660
1970–71	60,337	11,510	2,522

(உ) ஊதியம்—நாளுக்கு 8 மணி நேர வேலை :

	62–63 முதல் 65–66 வரை	66–67 முதல் 70–71 வரை	தற்போதைய வருட சராசரி.
	ரூ.	ரூ.	ரூ.
கை இராட்டை	0.66	0.80	83.00
அம்பர்	1.02	1.66	93.00
டெக்ஸ்டைல்	2.00	2.00 முதல் 2.50 வரை	319.00

(எ) எட்டுமணிநேர சிட்ட உற்பத்தியும்—வருட சராசரியும் :

	எட்டுமணி நேர வேலை.	வருட சராசரி.
	ரூ.	ரூ.
கை இராட்டை	2 முதல் 3	600.00
அம்பர்	6 முதல் 8	1,800.00
டெக்ஸ்டூல்	18 முதல் 22	5,400.00 முதல் 6,600.00 வரை.

